# சட்டமும் நீங்களும்
# LAW AND YOU



6



## திருமணம் மற்றும் விவாகரத்து தொடர்பான சட்டம்

## LAW RELATING TO MARRIAGE AND DIVORCE


சட்டத்தரணி இரா.திருக்குமாரநாதன்,

**R.Thirukumaranathan,** LL.B (COL), LL.M (COL.),

ATTORNEY-AT-LAW.


USAID
FROM THE AMERICAN PEOPLE

CPPHR
Centre for the Promotion and Protection of Human Rights


மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான நிலையம்,
இல: 238, உட்துறைமுக வீதி,
திருகோணமலை.

# சட்டமும் நீங்களும்

# LAW AND YOU

6

# திருமணம் மற்றும் விவாகரத்து தொடர்பான சட்டம்

# LAW RELATING TO MARRIAGE AND DIVORCE


தொகுப்பாக்கம்:

சட்டத்தரணி இரா.திருக்குமாரநாதன்

**R.THIRUKUMARANATHAN, LL.B (COL.); LL.M (COL.),**
**ATTORNEY-AT-LAW**
**P.G Diploma in Criminology & Criminal Justice (J' PURA)**
**Diploma in Conflict Resolution (BCIS) (U PEACE – COSTARICA)**



இலவச வெளியீடு:

மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான நிலையம்,
இல: 238, உட்துறைமுக வீதி,
திருகோணமலை.

# உள்ளடக்கம்


- அணிந்துரை
- வெளியீட்டுரை.
- கருத்துரை.
- முகவுரை.

அத்தியாயம் - 1.

- திருமணம் - Marriage.
- திருமண வகைகள் - Categories of Marriage.
- திருமணம் தொடர்பான நியதிச் சட்டங்கள் Statutory Laws relating to Marriage.
- வலிதான திருமணத்தின் தேவைப்பாடுகள். Requirments of valid Marriage.
- பதிவுத் திருமணம் தொடர்பான நடபடிமுறைகள். Procedures relating to registration of Marriage.
- வலிதான திருமணத்தின் விளைவுகள். Consequences of valid Marriage.

அத்தியாயம் - 2.

- வலிதற்றதாகக் கருதப்படக்கூடிய திருமணம் Marriage to be treated as invalid.
- வெற்றும் வெறிதுமான திருமணம் - Null & Void Marriage.
- வெறிதாகத்தகு திருமணம் - Voidable Marriage.

அத்தியாயம் - 3.

- விவாகரத்து - Divorce.
- திருமணக் குற்றங்கள் - Matrimonial Faults.
- விவாகரத்து வழக்குகள் - Divorce Actions.
- நீதிமுறைப் பிரிவு - Judicial Separation.
- பிரிமனைப் பணம் -Alimony.
- மேன்முறையீட்டு நடபடிமுறைகள் - Appeal Procedure.

அத்தியாயம் - 4.

- திருமண வாக்குறுதி - **Promisse of Marriage.**
- திருமண வாக்குறுதி மீறலின் விளைவுகள் **Consequences of breach of promise of Marriage.**
- திருமண வாக்குறுதி மீறல் தொடர்பான வழக்குகள் **Actions relating to breach of promise of Marriage.**

அத்தியாயம் - 5.

- இஸ்லாமிய திருமணம் - **Muslim Marriage.**
- இஸ்லாமிய திருமணத்தின் விளைவுகள் **Consequences of Muslim Marriage.**
- இஸ்லாமிய திருமணம் தொடர்பான விவாகரத்து **Divorce relating to Muslim Marriage.**

அத்தியாயம் - 6.

- கண்டிய திருமணம் - **Kandyan Marriage.**
- கண்டிய திருமண வகைகள் **- Categories of Kandyan Marriage.**
- கண்டிய திருமணத்தின் விளைவுகள் **Consequences of Kandyan Marriage.**
- கண்டிய திருமணம் தொடர்பான விவாகரத்து - **Divorce relating to Kandyan Marriage.**

அத்தியாயம் - 07.

- தீர்பபுச் சட்டங்கள ்- **Case Laws.**

அத்தியாயம் - 08.

- மாதிரி பிராதுகள் – **Draft Plaints.**
- வழியுரிமை உரித்து – **Right of Succession.**

මහාධිකරණය-ත්‍රිකුණාමලය
மேல் நீதிமன்றம்-திருகோணமலை
HIGH COURT-TRINCOMALEE

| | | | | |
|---|---|---|---|---|
| විනිසුරු නිල මැදිරිය<br>நீதிபதி<br>Judge`s Chamber | 026-2221485 | ලේඛකාධිකාරී<br>பதிவாளர்<br>Registrar | 026-2222086 | ඊමේල්<br>இ.மெயில்<br>E.mail |
| මගේ අංකය<br>எமது இல.<br>My No | | ඔබේ අංකය<br>உமது இல<br>your No | | දිනය<br>திகதி<br>Date. |

# அணிந்துரை

## அன்னலிங்கம் பிரேம சங்கர் அவர்கள்
## மேதகு மேல்நீதிமன்ற நீதிபதி
## திருகோணமலை

திருமணம் என்பது இருமனங்கள் சங்கமிக்கும் நிகழ்வாகும். இத்திருமணம் ஒரு நாள் சம்பவமாகக் கருதமுடியாததும், கருதிக் கொள்ளக்கூடாததுமாகும். ஓர் ஆத்மாவின் ஆயுள் உள்ளவரை தொடரும் பந்தமாகும்.

மேற்குறித்தவாறான திருமணம் என்ற விடயம் தொடர்பில் ஸ்ரீலங்காவில் வலுவிலுள்ள சட்டங்களின் நிலைப்பாடுகள் எவ்வாறானவை என்றும், அதன் விளைவுகள் என்ன என்பதும் சாதாரணமாக அனைவரும் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டிய விடயங்களாக கொள்ளப்படுகின்றது.

இந்த வகையில் அன்பர், சிரேஷ்ட சட்டத்தரணி இரா.திருக்குமாரநாதன் **திருமணம் மற்றும் விவாகரத்து தொடர்பான சட்டம்** என்ற தலைப்பில் சட்டமும் நீங்களும் என்றவாறான தொகுப்பின் கீழ் ஆறாவது (06) இதழாக இந்த நூலை சமர்ப்பித்துள்ளார்.

இந்த நூலானது தமிழ்மொழியில் மிகவும் இலகுவான மொழிநடையில் அமைக்கப்பட்டுள்ளது. திருமணம் தொடர்பான சட்ட விளக்கங்கள் அனைத்தும் இரத்தினச் சுருக்கமாக முன்

வைக்கப்பட்டுள்ளது. சட்ட அறிவு உள்ளவர்கள் மட்டுமின்றி பாமர மக்களும் படித்து விளங்கக் கூடிய வகையில் இந்த நூலை ஆக்கியுள்ளமை சிறப்பம்சமாகும்.

இந்த நூலை சட்டத்தரணி இரா.திருக்குமாரநாதன் வடிவமைத்திருந்தாலும் அதனை வெளியிடுவது தொடர்பில் திருகோணமலை மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான நிறுவனமும், யூ.எஸ்.எய்ட் (USAID) நிறுவனமும் ஆக்கபூர்வமான அனுசரணை வழங்கியுள்ளமை பெரிதும் பாராட்டப்படுகின்றது.

இவ்விதழில் உள்ள இரத்தினச் சுருக்கமான சட்ட விளக்கங்கள் தமிழ்பேசும் சட்டத்தரணிகளுக்கு மாத்திரமல்ல தமிழை மட்டும் தெரிந்த பாமர மக்களுக்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளமை மிகவும் சிலாகிக்கப்படுகின்றது.

பொதுவாக சுயமொழியில் சிந்திப்பதும், செயற்படுவதும் இலகுவானதாகவும் தரம் மிக்கதாகவும் அமையும். தமிழ்மொழியில் தொழில் புரியும் இளஞ்சட்டத்தரணிகளுக்கு சட்டங்கள் தமிழ்மொழியில் கிடைப்பதென்பது குதிரைக் கொம்பான நிலையாகும். இந்த வகையில் சட்டத்தரணி இரா.திருக்குமாரநாதனின் இந்த முயற்சி அவர்களுக்கு பேருதவியாக அமையும் என நம்பப்படுகின்றது.

சிரேஷ்ட சட்டத்தரணி திருக்குமாரநாதன் அவர்களதும், திருகோணமலை மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான நிலையம் மற்றும் அதன் பணிப்பாளர் அருட்தந்தை வே.யோகேஸ்வரன் அவர்களதும் முயற்சிகளும் பணிகளும் வெகுவாகப் பாராட்டப்படுகின்றது.

அவர்கள் அனைவரும் மேலும் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டு சட்டமும் தமிழும் இணைந்து வளர பாடுபடவேண்டும் என கேட்டுக்கொண்டு, அவர்களுக்காக எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து என் நன்றியறிதலை தெரிவித்து அமைகின்றேன்.



# <u>வெளியீட்டு உரை:</u>

**OUR VISION**: **Upholding the Rights of All**

**OUR MISSION**: **Participating & Accompanying in the Life of Human Rights victims.**

மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான நிலையம், இயேசுசபை துறவிகளினால் திருகோணமலை மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 2004 ஆம் ஆண்டு மார்கழி மாதத்தில் நிகழ்ந்த சுனாமி ஆழிப்பேரலையினால் ஏற்பட்ட பாதிப்புகளின் போது ஏனைய சமூகப்பணி நிறுவனங்களோடு இணைந்து சமூகத்தை மீளக்கட்டியெழுப்ப பல பணிகளை ஆற்றியது.

2006 ஆம் ஆண்டு மாவிலாறில் உருவான யுத்த ஆரம்பத்தின் போது இடம் பெயர்ந்த மக்கள் மத்தியில் அன்றாட தேவைகளைப் ”ர்த்தி செய்வதற்கான சேவைகளைப் புரிந்து கொண்டிருந்தது. அவ் வேளையில் நடந்து கொண்டிருந்த யுத்தத்தின் பின்னணியில் மனித உரிமைகள் பல கோணங்களிலும் மீறப்பட்டுக் கொண்டிருந்த போது மனித உரிமைகளை மேம்படுத்தவும் பாதுகாப்பதற்குமென எமது சேவை விஸ்தரிக்கப்பட்டது.

இதன் பின்னணியில் இன்று மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான நிலையம் பல வகையான சேவைகளை ஆற்றிவருகின்றது. அவற்றில் சில பின்வருமாறு:-

- மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வுகள், கருத்தரங்குகள், கற்கை நெறிகளை வழங்குதல்.

- அவசரகாலவிதிகள் மற்றும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் **(E.R & P.T.A)** ஏற்பாடுகளின் பின்னணியில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் விடுதலை சார்பாக இலவச சட்ட உதவி வழங்கலும், சிறைச்சாலை சென்று கைதிகளைச் சந்தித்தல்.

- யுத்தத்தில் பாதிக்கப்பட்டு குடும்பத் தலைவன் இல்லாத சூழ்நிலையில் குடும்பத்துக்கு தலைமை தாங்கும் பெண்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குதல்.

- பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு கல்வி கற்றலுக்கான உதவிகளை வழங்கல்

- மனித உரிமைகள் சார்பாக பரிந்துரைகளை மேற்கொள்ளல்

- குடும்ப வன்முறை, குடும்பப்பிணக்குகள், காணிப்பிணக்குகள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற பல சமூகப்பிரச்சனைகளுக்கு இலவச சட்ட உதவி, சட்ட ஆலோசனை வழங்கப்படுகின்றது.

இதன் பின்னணியிலேயே சாதாரண மக்கள் மத்தியில் சட்ட அறிவையும், உரிமைக் குரலையும் மேம்படுத்த ‘‘சட்டமும் நீங்களும்’’ என்ற தலைப்பில் சில சட்டவிடயங்கள் சிறு கைநூல் வடிவத்தில் இந்நிறுவனத்தால் வெளியிடப்பட்டு வருகின்றது.

இக் கைநூல்களினூடாக பொதுமக்களும், சட்ட அறிவை ஊக்குவிப்பாளர்களும் இதனைப் பயன்படுத்தி நன்மை அடைவார்கள் என எதிர்பார்க்கின்றோம். அவ்வாறான கைநூல்களில் ஒன்றே இந்த வெளியீடு ஆகும்.

எமது நிறுவனம் **“இல்லத்து வன்முறை தடுப்பு சட்டம்” (LAW OF PREVENTION OF DOMESTIC VIOLENCE**, **“பராமரிப்பு விண்ணப்பம் தொடர்பான சட்டம்” (LAW RELTAING TO MAINTANENCE APPLICATION) , “பிள்ளையின் கட்டுக்காவல் மற்றும் பாதுகாவல் தொடர்பான சட்டம்” (LAW RELATING TO GUARDIANSHIP AND CUSTODY OF THE CHILD) “பிள்ளையினை மகவேற்பது தொடர்பான சட்டம்” (LAW RELATING TO ADOPTION OF THE CHILD)” மற்றும் ‘வேலையாட்களின் உரிமைகள் தொடர்பான சட்டம்” (LAW RELATIONG RIGHTS OF WORKS)’** எனும் தலைப்புக்களில் ஐந்து சட்டக் கைநூல்களை ஏற்கனவே வெளியிட்டுள்ளது. தற்போது ஆறாவது சட்டக்கைநூலாக **“திருமணம் மற்றும் விவாகரத்து தொடர்பான சட்டம்” (LAW RELATING TO MARRIAGE AND**

**DIVORCE)"** எனும் தலைப்பில் எமது நிறுவனத்தின் ஆறாவது சட்டக் கைநூல் வெளியிடப்படுகின்றது.

இச்சட்டக் கைநூலினை வாசித்து பயன்பெறுபவர்கள் இந்நூல் பற்றிய உங்களது அபிப்பிராயங்களையும் மற்றும் கருத்துக்களையும் எமது நிறுவனத்திற்கு எழுத்து மூலம் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்களது ஆலோசனைகளும் மற்றும் அபிப்பிராயங்களும் நாம் தொடர்ச்சியாக இத்தகைய சட்டக் கைநூல்களை வெளியிடுவதற்கு உந்துசக்தியாக இருக்கும்.

மேலும் இச்செயற்பாட்டிற்கு எமக்கு தொடர்ச்சியாக நிதி அனுசரணை வழங்குகின்ற **USAID** நிறுவனத்திற்கு எமது மனமார்ந்த நன்றிகளையும் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றோம். இத்தகைய சட்டக்கைநூல்களை ஆக்கம் செய்வதில் ஆர்வம் உள்ள சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட சட்டத்தரணிகள் தங்களது விருப்பத்தை தெரிவித்து எமது நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம். அவ்வாறு தொடர்பு கொள்ளும் பட்சத்தில் எமது நிறுவனம் தொடர்ந்தும் இத்தகைய சட்டக்கைநூல்களை வெளியிடுவது தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும்.

**அருட்தந்தை வே.யோகேஸ்வரன் S .J,**
**பணிப்பாளர், ம.உ.மே.பா. நிலையம்,**
**இல: 238, உட்துறைமுக வீதி,**
**திருக்கோணமலை.**
**தொ.பே.இல: 0714288932**

**எமது தொடர்புகளுக்கு:-**

**அருட்தந்தை வே.யோகேஸ்வரன் S .J,**
**அலுவலகம்: CPPHR,**
**இல: 238, உட்துறைமுக வீதி,**
**திருக்கோணமலை.**

**தொ.பே:இல: 026-3260895.**

# கருத்துரை

## *கலாநிதி கனகசபாபதி சரவணபவன் அவர்களின் பார்வையில் ' சட்டமும் நீங்களும் '*

**'சட்டமும் நீங்களும்'** சட்ட அறிவை பொதுமக்களிடம் எடுத்துச் செல்லும் ஒரு புதிய முயற்சி. சட்டம் அரசின் மேலாண்மையை வெளிப்படுத்தும் கருவியாக மாத்திரம் இன்றி தனி மனிதனின் உரிமைகள் குறித்தும் பேசுவதால் சட்டம் குறித்த அறிவு அனைவருக்கும் அவசியமாகின்றது.

சமூக வளர்ச்சியை சட்டம் நெறிப்படுத்துவதால் அது சமூகத்தின் மேலாண்மைக் கருவியாக உணரப்படுகின்றது. மற்றொரு தோற்றத்தில் சமூக வளர்ச்சியே சட்டத்தின் மாற்றங்களையும் தீர்மானிக்கின்றது. ஒரு சமூகம் வளர்ச்சியடையும் போது தன் கடந்த கால எழுச்சியிலும் வீழ்ச்சியிலும் கற்றுக்கொண்டவற்றில் இருந்து விதிகளை திருத்தியும், புதிதாகவும் உருவாக்கிக் கொள்வதால் சட்டம் என்பது சமூகத்தின் தவிர்க்க முடியாத தேவையாகக் கருதப்படுகின்றது. எனவே மனித நாகரீகத்தின் மிகச் சிறந்த குறியீடாக சட்டத்தின் ஆட்சி மதிக்கப்படுகின்றது. சட்டத்தின் ஆட்சியே தனி மனித சுதந்திரத்தையும் அந்நாட்டின் இறையாண்மையும் உறுதி செய்கின்றது.

சட்டத்தின் ஆட்சியில் வாழும் ஒவ்வொரு குடிமகனும் ஆள்பவர்களின் அதிகாரத்தையும், ஆளப்படுபவர்களின் உரிமைகளையும் தெளிவாக அறிந்திருத்தல் அவசியமாகின்றது. இந்த இரு பக்க அறிவு குடிமக்களிடையே விரிவடையும் நிலையில் ஜனநாயகம் முழுமை பெறும். ஆனால் நடைமுறையில் சட்டம் குறித்த குடிமக்களின் அறிவு மிகக் குறைந்த மட்டத்தில் இருப்பது வெளிப்படையானது.

சட்ட நூல்களைப் பெறுவதோ அல்லது அதனைத் தெளிவாகப் புரிந்து கொள்வதோ ஒன்றும் இலகுவானதல்ல. குடிமக்களின்

நாளாந்த வாழ்வில் சட்டம் வகுத்திருக்கும் வரையறைகளை ஒவ்வொரு குடிமகனும் தெரிந்திருக்க வேண்டியது அவசியமானது. மேற்குலகில் சமூக அக்கறை கொண்ட சட்ட அறிஞர்கள் பொதுமக்களுக்கான சட்ட நூல்களை எழுதி வெளியிட்டு வருகின்றார்கள்.

இலங்கையில் சட்டம் சார்ந்த நூல்களை பொதுமக்களுக்காக எழுதும் முயற்சி மிகக் குறைவானதே. சட்ட அறிவை பொதுமக்களிடம் வளர்த்தல் என்பது ஜனநாயகத்தின் மீது ஒருவர் கொண்டிருக்கும் அக்கறையின் வெளிப்பாடாகும்.

அன்பு நண்பர் வழக்கறிஞர் இரா.திருக்குமாரநாதன் அவர்களின் சமூக அக்கறையால் வெளியாகும் **'சட்டமும் நீங்களும்'** மிக உயர்வாக மதிக்கத்தக்க முயற்சியாகும். சமூகம் அல்லது தனி மனிதன் சார்ந்த சட்ட விதிகளை எவரும் இலகுவில் அறிந்து கொள்ளக்கூடிய முறையில் மிக எளிமையான மொழிநடையில் வெளியிட்டுவருவது இலங்கைத் தமிழுக்கு புதிய முயற்சி. அவரது இந்த அரும்பணி தொடர நாம் அனைவரும் அவரை வாழ்த்துவோம்.

**கலாநிதி கனகசபாபதி சரவணபவன்,**
**இல.294, அன்புவழிபுரம்,**
**திருகோணமலை.**



## *முகவுரை*

ஓர் ஆணும் பெண்ணும் தமது திருமண வாழ்க்கையை பல்வேறு கனவுகளுடனும், எதிர்பார்ப்புக்களுடனும் ஆரம்பிக்கின்றனர். அத்தகைய அவர்களது கனவுகளும், எதிர்பார்ப்புக்களும் நிறைவேறும் பொழுது குறித்த திருமண வாழ்க்கையானது அவர்களுக்கு நந்தவனமாக அமைகின்றது. ஆனால் அந்த எதிர்பார்ப்புக்களும், கனவுகளும் ஓரளவுக்கேனும் நிறைவேறாவிடில் அந்த வாழ்க்கை அவர்களுக்கு பாலைவனமாக தென்படும். திருமணம் என்பது சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவதாக எல்லோராலும் பொதுவாக கூறப்படுகின்றது. ஆனால் இன்றைய காலகட்டத்தில் '**திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றதா அல்லது ரொக்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றதா**' என்பது ஒரு விவாதத்துக்குரிய விடயமாக காணப்படுகின்றது. திருமணமானது, சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்டாலும் அது ரொக்கமின்றி நிறைவேறுமா என்பதும் கேள்விக்குறியாக உள்ளது.

திருமண வாழ்க்கையானது கணவன், மனைவிக்கிடையில் சந்தோசமாக நீடித்து நிலைத்து நிற்க வேண்டுமாயின் அவர்கள் இருவரிடத்திலும் பரஸ்பர நம்பிக்கை, விட்டுக்கொடுப்பு, சகிப்புத்தன்மை, அனுசரித்துப் போதல் ஆகிய செயற்பாடுகள் இன்றியமையாதனவாகும். இவற்றிற்கும் மேலதிகமாக கணவன் மனைவிக்கிடையில் சந்தோசமான தாம்பத்திய உறவு என்பதும் இன்றியமையாத ஓர் அம்சமாக காணப்படுகின்றது. கணவன் மனைவிக்கிடையில் அவர்களுடைய திருமண வாழ்க்கையின் போது மேற்குறித்த அம்சங்கள் காணப்படாவிடின் அந்த வாழ்க்கை முள்ளின் மேல் நடப்பதை போன்று அமைந்து விடும்.

**"இல்லத்து வன்முறை தடுப்பு சட்டம்" (LAW OF PREVENTION OF DOMESTIC VIOLENCE, "பராமரிப்பு விண்ணப்பம் தொடர்பான சட்டம்" (LAW RELTAING TO MAINTANENCE APPLICATION) , "பிள்ளையின் கட்டுக்காவல் மற்றும் பாதுகாவல் தொடர்பான சட்டம்" (LAW RELATING TO GUARDIANSHIP AND CUSTODY OF THE**

CHILD) **“பிள்ளையினை மகவேற்பது தொடர்பான சட்டம்” (LAW RELATING TO ADOPTION OF THE CHILD)” மற்றும் ‘வேலையாட்களின் உரிமைகள் தொடர்பான சட்டம் (LAW RELATIONG RIGHTS OF WORKS)’** எனும் தலைப்புக்களில் ஐந்து சட்டக் கைநூல்களை ஏற்கனவே தொகுக்கப்பட்டுள்ளன. தற்போது **“திருமணம் மற்றும் விவாகரத்து தொடர்பான சட்டம்” (LAW RELATING TO MARRIAGE AND DIVORCE)”** எனும் தலைப்பில் இப்புத்தகம் ஆறாவது சட்டக் கைநூலாக ஆக்கப்பட்டுள்ளது. இப்புத்தகத்தில் முக்கிய விடயங்களாக திருமணம் மற்றும் விவாகரத்து போன்ற விடயங்கள் ஆராயப்படுகின்றன.

இத்தகைய சட்டக் கைநூல்களை தொடர்ந்து தொகுத்து வழங்குவதற்கு என்னை தொடர்ச்சியாக ஊக்குவித்துக் கொண்டிருக்கும் **“மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான நிலையத்தின் பணிப்பாளரும் சட்டத்தரணியுமான அருட்தந்தை வீ.யோகேஸ்வரன்”** அவர்களுக்கும் மற்றும் இச்செயற்பாட்டை தொடர்ச்சியாக செயற்படுத்த வேண்டும் என என்னை தொடர்ச்சியாக உற்சாகப்படுத்திக் கொண்டிருக்கும் நீதித்துறையைச் சார்ந்தவர்களுக்கும், சட்டத்துறையைச் சார்ந்தவர்களுக்கும் ஏனைய கல்வியாளர்களும் எனது மனமார்ந்த நன்றிகள்.

இத்தகைய சட்டக் கைநூல்களை தொடர்ச்சியாக தொகுத்து வழங்குவதற்கு எனக்கு பல்வேறு வடிவங்களில் உதவிகள் ஒத்தாசைகள் வழங்கிக் கொண்டிருக்கும் ஏனையோருக்கும் மற்றும் இச்செயற்பாட்டினை சிறந்த முறையில் செயற்படுத்துவதற்கு தொடர்ச்சியாக நிதி அனுசரணை வழங்கிக்கொண்டு வருகின்ற **USAID** நிறுவனத்திற்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

இதுவரையில் ஆக்கப்பட்டுள்ள சட்டக் கைநூல்கள் பற்றி வாசகர்களிடம் இருந்து கிடைக்கப் பெற்ற அபிப்பிராயங்களும் கருத்துக்களும் இத்தகைய ஆக்கங்களைத் தொடர்ந்து வெளிக்கொண்டு வரவேண்டும் என்பது தொடர்பில் என்னை மேலும் உற்சாகம் ஊட்டுவதாக உள்ளன. உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

**சட்டத்தரணி இரா.திருக்குமாரநாதன்,**
**R.THIRUKUMARANATHAN, LL.B (COL), LL.M (COL.),**
**ATTORNEY-AT-LAW.**

# *திருமணம் மற்றும் விவாகரத்து தொடர்பான சட்டம்*
# *LAW RELATING TO MARRIAGE AND DIVORCE*

திருமணமானது திருமணத்தின் திறத்தவர்களினதும் மற்றும் திருமணத்தின் விளைவாக பிறக்கின்ற பிள்ளைகளினதும் சட்டரீதியான உரிமைகளை தோற்றுவிப்பதில் முக்கிய பங்களிப்பு செய்கின்றது. இத்தகைய உரிமைகளை சமூகம் மட்டுமல்லாது பல்வேறு சட்ட முறைமைகளும் ஏற்று அங்கீகரித்துள்ளன. உரோமன் - டச்சுச் சட்டம், கண்டியச்சட்டம், தேசவழமை, மற்றும் இஸ்லாமிய சட்டம் எனபன திருமணத்தின் விளைவாக உருவாகும் சட்டரீதியான உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் என்பன பற்றி தெளிவாக எடுத்துரைக்கின்றன.

சட்ட ரீதியான திருமணம் ஒன்றின் மூலமாக எழுகின்ற உரிமைகள் திருமணத்தின் திறத்தவர்களை மட்டுமல்லாது அவர்கள் வாரிசாக அத்திருமணத்தின் விளைவாக பிறக்கின்ற பிள்ளைகள் தொடர்பிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. திறத்தவர்களது திருமணமானது சட்டரீதியான அந்தஸ்தை பெற்றுக்கொள்வதற்கு சில அடிப்படைத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்ய வேண்டியது முக்கிய அம்சமாகும். திருமணம் செய்து கொள்ளும் திறத்தவர்கள் அத்திருமணத்தோடு தொடர்புபட்ட அடிப்படை சட்டக்கோட்பாடுகளை மீறிச் செயற்படுகின்ற சந்தர்ப்பங்களில் திருமணத்தின் திறத்தவர்களுக்கும் மற்றும் அத்திருமணத்தின் விளைவாக பிறக்கின்ற பிள்ளைகளுக்கும் சட்ட ரீதியான தாக்கங்கள் ஏற்படுகின்றன. எனவே இச்சட்டக்கைநூலில் வலிதான திருமணமொன்றை பூர்த்தி செய்வதற்கு தேவையான அடிப்படை அம்சங்கள் எவை என்பது பற்றியும் ஆராயப்படுகின்றது.

திருமணமொன்றை சட்டரீதியாக செய்து கொள்ளவிரும்புவர்கள் எத்தகைய நடபடிமுறைகளை பின்பற்ற வேண்டும்? திருமணம் ஒன்றை செய்வதற்கான தகுதிகள் மற்றும் தகைமைகள் எவை? என்பது பற்றி இப்புத்தகத்தில் சுருக்கமாக எடுத்துக்

கூறப்படுகின்றது. திருமண வாழ்க்கையில் இணைந்து கொள்பவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள், திருமணம் செய்யக்கூடிய உறவுமுறை எவை? திருமணம் செய்வதிலிருந்து தடுக்கப்பட்ட உறவுமுறை எவை? மற்றும் தடுக்கப்பட்ட உறவு முறையில் திருமணம் செய்வதால் ஏற்படும் விளைவு என்ன? என்பது பற்றி எமது பொதுத்திருமணக் கட்டளைச்சட்ட ஏற்பாடுகளினால் எடுத்துரைக்கப்பட்டுள்ள விடயங்கள் என்பன இப்புத்தகத்தில் விபரிக்கப்படுகின்றன.

பல்வேறு கனாக்களுடனும், கற்பனைகளுடனும் நந்தவனம் போன்ற வாழ்க்கையை அமைப்பதற்கு திருமண வாழ்க்கையில் இணைந்து கொண்ட தம்பதிகள் அந்த வாழ்க்கையானது பாலைவனம் போன்ற உணர்வை ஏற்படுத்துமாயின் அவர்கள் விவாகரத்தை நாடுவதே இயல்பான ஒரு விடயமாகும். எனவே விவாகரத்து தொடர்பாக வழக்கொன்று தாக்கல் செய்வதாயின் எத்தகைய நடபடிமுறைகள் பின்பற்ற வேண்டும்? விவாகரத்து ஒன்றின் அடிப்படை காரணிகளாக எவற்றை சட்டங்கள் அங்கீககரித்துள்ளன? விவாகரத்து வழக்கின் மூலம் எத்தகைய நிவாரணங்களை நீதிமன்றின் மூலம் பெற்றுக்கொள்ளமுடியும்? எனும் விடயங்கள் பற்றி இப்புத்தகத்தில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

பல்வேறு நவீன தொடர்பாடல் வசதிகள் நிறைந்த இன்றைய உலகிலே இளைஞர்களிடையே குறிப்பாக காதலர்களிடையே காதல் செய்திப்பரிமாற்றங்கள் இலகுவாகவும் விரைவாகவும் தாராளமாகவும் பரிமாறப்படுகின்றன. அத்தகைய திருமண வாக்குறுதியின் சட்டரீதியான நிலைமை எத்தகையது? அது மீறப்படின் அதன் விளைவுகள் எவை? அதன் காரணமாக பாதிக்கப்பட்ட நபர் எத்தகைய நிவாரணங்களை பெறமுடியும்? என்பது தொடர்பிலான நியதிச்சட்டங்கள் மற்றும் தீர்ப்புச்சட்டங்கள் தொடர்பான விடயங்களும் இப்புத்தகத்தில் எடுத்தாளப்பட்டுள்ளன.

இப்புத்தகத்தில் திருமணம் மற்றும் விவாகரத்து தொடர்பில் பொதுச்சட்டத்தின் கீழான நிலைமைகளை மட்டுமல்லாது இஸ்லாமியச் சட்டம் மற்றும் கண்டியச் சட்டம் என்பவை தொடர்பான சட்டநிலைமைகளும் எடுத்தாளப்பட்டுள்ளன.

இப்புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் பாமர மக்களுக்கு மட்டுமன்றி படித்தவர்களுக்கும், சட்டத்துறை

சார்ந்தவர்களுக்கும் பயன்பட வேண்டும் என்பதை கருத்திற் கொண்டு, விவாகரத்து வழக்கு தொடர்பான மாதிரி பிராதுகள் மற்றும் சில தீர்ப்புச்சட்டங்களும் புத்தகத்தின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளது.

# அத்தியாயம் 1

- **திருமணம் - Marriage.**
- **திருமண வகைகள் - Categories of Marriage.**
- **திருமணம் தொடர்பான நியதிச் சட்டங்கள்**
  **Statutory Laws relating to Marriage.**
- **வலிதான திருமணத்தின் தேவைப்பாடுகள்.**
  **Requirments of valid Marriage.**
- **பதிவுத் திருமணம் தொடர்பான நடபடிமுறைகள்.**
  **Procedures relating to registration of Marriage.**
- **வலிதான திருமணத்தின் விளைவுகள்.**
  **Consequences of valid Marriage.**

### 1. திருமணம் என்றால் என்ன?

ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் ஆகிய இருவரும் தாம்பத்திய உறவுடன் கூடிய வாழ்க்கையில் சட்டரீதியாக இணைவது திருமணம்.

ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் ஆகிய இருவரும் திருமணம் செய்து தாம்பத்திய உறவினை ஏற்படுத்திக்கொள்ளாது, தொடர்ந்து திருமண வாழ்க்கையை நடாத்தி வந்தாலும் அவர்கள் இருவருக்கும் இடையில் திருமணம் ஒன்று சட்டத்தின் பிரகாரம் முழுமையாக இடம் பெற்றுள்ளதாகக் கருதப்படமாட்டாது.

### 2. இலங்கையில் வலிதான திருமணம் எவ்வாறாக இடம்பெறுகின்றன?

**1907 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க** பொது திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் **(General Marriage Registration Ordinance of No: 19 of 1907)** ஏற்பாடுகளின் பிரகாரம் இடம்பெறும் திருமணம்.

**1951 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க** இஸ்லாமிய திருமணம் மற்றும் விவாகரத்துக் கட்டளைச்சட்டத்தின் (**Muslim Marriage and Divorce Ordinance of No: 13 of 1952)** ஏற்பாடுகளின் பிரகாரம் இடம்பெறும் திருமணம்.

**1952 ஆண்டின் 44 ஆம் இலக்க** கண்டிய திருமணம் மற்றும் விவாகரத்துக் கட்டளைச்சட்டத்தின் (**Kandiyan Marriage and Registration Divorce of No: 44 of 1952)** ஏற்பாடுகளின் பிரகாரம் இடம்பெறும் திருமணம்.

## 4. நியதிச் சட்டங்களினால் ஏற்பாடு செய்யப்படாததும் ஆனால் நீதிமன்றங்களினால் அங்கீகரிக்கப்படுகின்றதுமான ஏனைய வகையான திருமணங்கள் எவை?

வழக்காற்றுத் திருமணம் - **Customary Marriage.**
கூடி வாழ்தல் மூலமான திருமணம் - **Marriage by Co-habitation.**
நம்பக திருமணம் - **Puatative Marriage.**

## 5. வழக்காற்றுத் திருமணம் என்றால் என்ன?

சமூகத்தின் வழக்கங்களின் அடிப்படையில் இடம்பெறும் திருமணம் வழக்காற்றுத் திருமணம். அதாவது குறித்த சமூகத்தில் அங்கீகரிக்கப்பட்ட வழக்கங்கள் மற்றும் சம்பிரதாயங்களுக்கு ஏற்ப இடம்பெறுகின்ற திருமணம் வழக்காற்றுத் திருமணம் ஆகும். வழக்காற்றுத் திருமணமானது நியதிச்சட்ட ஏற்பாடுகளினால் அன்றி நீதிமன்ற தீர்ப்புகளின் வளர்ச்சியின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட திருமணமாகும்.

நீதிமன்றங்களானது திருமணமொன்று வலிதுடையதாக இருப்பதற்கு திருமணப்பதிவு என்பது எப்போதும் கட்டாயமான தேவைப்பாடாக இருக்கமாட்டாது என்பதன் அடிப்படையில் வழக்காற்றுத் திருமணங்களை வலிதான திருமணங்களாக அங்கீகரித்துள்ளன.

## 6. கூடி வாழ்தல் மூலமான திருமணம் ( Marriage by Co-habitation ) என்றால் என்ன?

இரண்டு திறத்தவர்கள் அதாவது ஓர் ஆண் மற்றும் ஓர் பெண் ஆகிய இருவரும் ஒன்று சேர்ந்து தாம்பத்திய வாழ்க்கையை நடாத்தி வருகையில் அல்லது கணவன் மனைவியாக இணைந்து வாழ்ந்து வருகையில் அவர்களுடைய உறவினர்கள் நண்பர்களால் அவர்கள் இருவரும் திருமணம் செய்து கொண்டுள்ளதாக அங்கீகரிக்கப்பட்டிருப்பின் அதுவே கூடி வாழ்தல் மூலமான திருமணம் ஆகும்.

எனவே அவர்கள் செல்லுபடியான வலிதான திருமணம் ஒன்றை செய்து கொண்டுள்ளார்கள் என்று ஊகிக்கப்படும். இத்தகைய திருமணமானது சில சட்ட எழுத்தாளர்களால் நடப்பும் மதிப்பும் ( **Marriage by habit and repute** ) என அழைக்கப்படுகின்றது.

## 7. நம்பகத் திருமணம் ( Puatative Marriage ) என்றால் என்ன?

திருமணம் செய்த திறத்தவர்கள் இருவரும் திருமணம் நடைபெற்ற சந்தர்ப்பத்தில் தாங்கள் இருவரும் திருமணம் செய்வதற்கு தகுதியுடையவர்கள் என்ற நல்நோக்கத்தில் அல்லது நம்பிக்கையில் அத்திருமணமானது நம்பகத் திருமணம் என உரோமன் - டச்சுச் சட்டம் எடுத்துரைக்கின்றது.

நம்பகத்திருமணக் கோட்பாடானது வெற்றான திருமணங்கள் தொடர்பான வழக்குகளில் பயன்படுத்தக் கூடியதொன்றாகும். இதற்கமைய திருமணம் செய்யும் திறத்தவர் ஒருவர் மறு திறத்தவர் குறித்த திருமணத்திற்கான சட்டத்தகைமையை கொண்டிருக் கவில்லை என்பதை தான் அந்த நேரத்தில் அறிந்திருக்கவில்லை என்பதையும், இருதிறத்தவர்களில் எவரேனும் ஒருவர் தமக்கு திருமணம் செய்வதற்கான சட்டத்தகைமை உள்ளது என்ற நல் எண்ண அடிப்படையில் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டதாகவும் நீதிமன்றத்தின் முன் எண்பித்தல் வேண்டும்.

ஆரம்பத்தில் வெற்றும் வெறிதுமாக வெளிப்படுத்தக்கூடிய அத்தகைய திருமணமானது நம்பகத் திருமணக் கோட்பாட்டின் அடிப்படையில் அது ஒரு நம்பகத்திருமணம் என்று

ஏற்றுக்கொள்ளப்பட்டு குறித்த திருமணம் வலிதுடைய திருமணம் ஒன்றாக ஆக்கப்படமுடியும்.

**8. பொது திருமண கட்டளைச் சட்டத்திற் கொண்டுவரப்பட்ட 2001ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க திருத்தத்தின் பிரிவு 34(2) ஏற்பாடு செய்யும் விடயம் யாது?.**

பொது திருமண கட்டளைச் சட்டத்திற் கொண்டுவரப்பட்ட 2001ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க திருத்தத்தில் பிரிவு 34(2) புதிதாக சேர்க்கப்பட்டுள்ளது. அப்பிரிவு பின்வருமாறு ஏற்பாடு செய்துள்ளது. திருமணச் சடங்கு நிறைவேற்றியதை உடனடுத்து மதகுரு திருமண விபரங்கள் உள்ளடங்கிய கூற்றினை முதலாவது அட்டவணையில் உள்ள படிவத்தில் மூன்று பிரதிகளிலே பதிவு செய்தல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு பதிவும் முறையாக இலக்கமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

மதகுரு அத்தகைய கூற்றின் மூன்றாவது பிரதியை எவ்வித கட்டணங்களும் இன்றி திறத்தவர்களுக்கு வழங்க வேண்டும். அத்தகைய திருமணம் கிறிஸ்தவ மதத்தின் விதிகள் வழக்காறுகள் சம்பிரதாயங்கள் மற்றும் சடங்குகளுக்கு ஏற்ப நடைபெற்றது என்பதற்கு முகத்தோற்றத்திலான சான்றாக அமைகிறது'

இவ்வகையில் திறத்தவர்கள் வழக்காற்று திருமணம் ஒன்று தேவாலயத்தில் நடைபெற்றது என்பதற்கு சான்றாக குறித்த கூற்றின் மூன்றாவது பிரதியை சமர்ப்பிக்கலாம்.

## 9. திருமணம் மற்றும் விவாகரத்து விடயங்கள் தொடர்பில் எமது நாட்டில் தற்காலத்தில் நடைமுறையில் உள்ள முதன்மையான நியதிச் சட்டங்கள் எவை?

**1907 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க** பொது திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டம் - **General Marriage Registration Ordinance of No: 19 of 1907.**

**1951 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க** இஸ்லாமிய திருமணம் மற்றும் விவாகரத்துக் கட்டளைச் சட்டம் - **Muslim Marriage and Divorce Ordinance of No: 13 of 1952.**

**1952 ஆண்டின் 44 ஆம் இலக்க** கண்டிய திருமணம் மற்றும் விவாகரத்துக் கட்டளைச் சட்டம் - **Kandiyan Marriage and Divorce Ordinance of No: 44 of 1952.**

**10. திருமணம் மற்றும் விவாகரத்து விடயங்கள் தொடர்பில் எமது நாட்டில் தற்காலத்தில் ஏற்புடையதான வேறு சட்டம் எது?**

எமது நாட்டின் பொதுச் சட்டமாகக் கருதப்படும் **'உரோம டச்சுச் சட்டம்'** ( **Roman – Dutch Law** ) ஏற்புடையதாகும்.

**11. 1907 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க பொது திருமண கட்டளைச் சட்ட General Marriage Registration Ordinance of No: 19 of 1907 ஏற்பாடுகளின் பிரகாரம் வலிதான திருமணம் ஒன்றின் தேவைப்பாடுகள்?**

திருமணத்தின் இருதிறத்தவர்களின் பரஸ்பர சம்மதம்.

வலுக்கட்டாயம் மற்றும் முறையற்ற செல்வாக்கு என்பன இல்லாதிருத்தல் வேண்டும்.

திருமணம் ஒன்று நியதிச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பதிவு செய்யப்படல் வேண்டும்.

திருமண ஒப்பந்தம் ஒன்றைச் செய்வதற்கான ஏனைய தகைமைகளையும் திறத்தவர்கள் கொண்டிருத்தல் வேண்டும்.

**12. திருமணம் ஒன்றை செய்துகொள்வதற்கு திறத்தவர்கள் எத்தகைய தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்?**

ஆணாயினும் பெண்ணாயினும் அவர்கள் பதினெட்டு வயதை பூர்த்திசெய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

குறித்த ஆணும் பெண்ணும் புத்தி சுவாதீனம் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

திருமணத்திற்கான இரண்டு திறத்தவர்களும் அல்லது அவர்களில் ஒருவரேனும் அச்சந்தர்ப்பத்தில் வலிதான திருமணம் ஒன்றை உடையவர்களாக இருத்தல் கூடாது.

திருமணத்திற்கான இரண்டு திறத்தவர்களும் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் தடுக்கப்பட்ட நெருங்கிய உறவினர்களாக இருத்தல் கூடாது.

## 13. திருமணம் ஒன்றை பதிவு செய்துகொள்வதற்காக பொதுவாகப் பின்பற்ற வேண்டிய நடபடிமுறைகள் எவை?

திருமணம் ஒன்றை இரண்டு விதமாக பதிவு செய்து கொள்ள முடியும்.

- பொதுவான முறையின் கீழ் திருமணத்தை பதிவு செய்து கொள்ளலாம்.
- விசேட அனுமதியைப் பெற்று திருமணத்தை பதிவு செய்து கொள்ளலாம்.

## 14. பொதுவான திருமணப்பதிவை மேற்கொள்வதாயின் எத்தகைய நடவடிக்கை முறைகளை பின்பற்றுதல் வேண்டும்?

- பதிவுத்திருமணம் செய்து கொள்வதற்கான அறிவித்தல் ஒன்று திருமணப்பதிவினை செய்து கொள்வதற்கு நேர் முந்தியதான பன்னிரெண்டு வேலைநாட்களுக்கு முன்பு மற்றும் ஆகக்கூடுதலான காலப்பகுதியான மூன்று மாதங்களிற்கு மேற்படாத காலப்பகுதிக்குள் குறித்த பிரதேசத்தில் திருமணப்பதிவாளருக்கு கையளிக்கப்படல் வேண்டும்.

- இதன் பொருட்டு உரியவகையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்பத்திரம் குறித்த பதிவாளரிடம் கையளிக்கப்படல் வேண்டும்.

- திருமணம் செய்து கொள்ளவிருக்கும் ஆணும் பெண்ணும் ஒரே மாவட்டத்தில் குடியிருந்து வருவார்களாயின் ஒரு தரப்பினர் மாத்திரம் அறிவித்தலை கையளிக்க முடியும்.

- திருமணம் செய்து கொள்ளவிருக்கும் இருவரும் இரு வெவ்வேறு மாவட்டங்களில் குடியிருந்து வருவார்களாயின் அவர்கள் இருவரும் வெவ்வேறாக தாங்கள் குடியிருக்கும் பிரதேசங்களின் திருமணப்பதிவாளருக்கு இத்தகைய அறிவித்தலை கொடுத்தல் வேண்டும்.

## 15. இத்தகைய அறிவித்தல் கொடுக்கப்பட்ட பின்பு திருமணப்பதிவாளரால் எத்தகைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்?

- குறித்த திருமண அறிவித்தலின் ஒரு பிரதி திருமணப்பதிவாளரால் பொதுமக்கள் அறிந்து கொள்ளக்கூடிய வகையில் தங்களுடைய காரியாலய அறிவுப்புப்பலகையில் தொங்கவிடப்படல் வேண்டும்.

- இவ்வாறாக பகிரங்கமாக அறிவுப்பலகையில் தொங்கவிடப்படுவதன் மூலம் குறித்த திருமணம் தொடர்பில் சட்டரீதியான ஆட்சேபனைகள் தெரிவிக்க விரும்புவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

- எவரேனும் ஒருவர் மோசடியான அல்லது பிழையான முறையில் பல திருமணங்கள் செய்வதில் இருந்து தடுப்பதற்கும் இது வழி வகுப்பதாகவும் அமைகின்றது.

## 16. விஷேட அனுமதியுடன் திருமணம் ஒன்றை பதிவு செய்து கொள்வதற்காக பின்பற்ற வேண்டிய நடபடிமுறைகள் எவை?

பொதுவாக திருமணத்திற்கான அறிவித்தலானது திருமணத் திகதியிலிருந்து நேர்முந்திய பன்னிரெண்டு நாட்களுக்கு குறையாத முன்அறிவித்தல் இன்றி திருமணம் எதையும் பதிவு செய்ய முடியாது.

இருப்பினும் சில விசேட காரணங்களின் நிமித்தம் அத்தகைய அறிவித்தலை கொடுக்கமுடியாத சூழ்நிலைகள் காணப்படின் விசேட அனுமதியினை பெற்றுக்கொள்வதற்காக மாவட்ட திருமணப் பதிவாளருக்கு ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

அவ்விண்ணப்பத்தில் குறித்த விசேட காரணங்கள் பற்றி தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். அத்தகைய விசேட காரணம் பற்றி மாவட்ட திருமணப்பதிவாளர் திருப்தியடைவாராயின் அவரால் அத்தகைய விசேட அனுமதி வழங்கப்படும்.

மேற்குறித்த இரண்டு முறைகளிலும் திருமண அறிவித்தல் கொடுக்கப்பட்டு உரிய காலம் பூர்த்தியடைந்ததன் பின் பதிவாளர் அலுவலகத்தில் அல்லது அலுவலகத்திற்கு சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட பொதுவான இடமொன்றில் அல்லது தேவாலயத்தில் திருமணப்பதிவினை செய்து கொள்ளமுடியும்.

## 17. கத்தோலிக்க அல்லது கிறிஸ்தவ தேவாலய மத குருமார்கள் முன்னிலையில் இடம்பெறும் திருமணப்பதிவு தொடர்பில் பின்பற்ற வேண்டிய நடபடிமுறைகள் எவை?

முன்னர் விபரிக்கப்பட்டுள்ள முறைகளில் ஏதாவது ஒரு முறையில் திருமணப்பதிவிற்கான அறிவித்தலை திருமணப்பதிவாளரிடம் கையளித்து அவரது அனுமதியைப் வெளிப்படுத்துவதான பத்திரம் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும.

அந்த அனுமதிப்பத்திரத்தை குறித்த திருமணம் செய்துவைக்கப்படவுள்ள தேவாலய மதகுருவிடம் கையளிக்கப்படல் வேண்டும். குறித்த மதகுருவினால் சமய முறைப்படி திருமணம் செய்துவைக்கப்பட்ட பின்பு தேவாலயத்தின் பதிவுப் புத்தகத்தில் குறித்த திருமணம் சம்பந்தப்பட்ட விபரங்கள் பதிவுசெய்யப்படும்.

குறித்த மதகுரு குறித்த திருமணம் சம்பந்தப்பட்ட விபரங்கள் அடங்கிய பதிவின் பிரதி ஒன்றை அப்பிரதேசத்தின் மேலதிக

மாவட்டப்பதிவாளருக்கு / பிரதேச செயலாளருக்கு அனுப்பி வைப்பார். மேலதிக மாவட்டப்பதிவாளர் / பிரதேச செயலாளர் அந்த திருமணம் சம்பந்தப்பட்ட விபரங்கள் அடங்கிய பதிவை தங்களது காரியாலயத்தில் உரிய முறைப்படி பதிவு செய்துகொள்வார்.

## 18. பொது திருமண கட்டளைச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் இடம்பெற்ற திருமணம் தொடர்பான பதிவுச் சான்றிதழில் தவறு அல்லது பிழை காணப்படின் அவற்றை நிவர்த்தி செய்வதற்கு பின்பற்ற வேண்டிய நடபடிமுறைகள் எவை?

குறித்த பதிவுச்சான்றிதழில் காணப்படும் பிழைகள் திருமணத்திறத்தவரின் தவறு எதுவும் இல்லாத வகையில் தட்டச்சுப் பிழையின் காரணமாக சில தவறு அல்லது பிழைகள் ஏற்பட்டிருப்பின் பதிவாளருக்கு விண்ணப்பித்து அத்தகைய தவறு அல்லது பிழைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

குறித்த பதிவுச்சான்றிதழில் பிழையான விடயங்கள் உள்ளடக்கப் பட்டிருந்தால் அது தொடர்பாக மாவட்ட நீதிமன்றமொன்றில் வழக்கைத் தாக்கல் செய்து கட்டளையைப் பெற்று அத்தவறை அல்லது பிழைகளை திருத்திக் கொள்ளமுடியும்.

## 19. சட்டப்படியான வலிதான திருமணம் ஒன்றின் மூலம் ஏற்படும் விளைவுகள் எவை?

சட்டரீதியான வலிதான திருமணம் ஒன்று இடம்பெற்றிருக்கும் போது ஒரு வாழ்க்கைத்துணை மற்றைய வாழ்க்கைத்துணையை பராமரிக்கும் கடப்பாட்டிற்கு உட்படுகின்றார்.

திருமணத்தின் மூலம் பிறக்கும் பிள்ளைகளை பராமரிக்கும் கடப்பாடு பெற்றோர்களாகிய இருதிறத்தவர்களுக்கும் ஏற்படுகின்றது. திருமணத்தின் காரணமாக பெறக்கூடிய ஏனைய உரிமைகள், சிறப்புரிமைகள் என்பவற்றை அனுபவிக்கமுடியும்.

திருமணத்தின் மூலம் பிறந்த பிள்ளைகள் நெறிமுறையான பிள்ளைகளாகக் ( Legitimate Children ) கருதப்படுவார்கள்.

அவ்வாறான பிள்ளைகள் தந்தையுடைய வழியுரிமை சொத்துக்ககளுக்கு உரித்துடையவர்களாக இருப்பார்கள்.

# அத்தியாயம் - 2.

- **வலிதற்றதாகக் கருதப்படக்கூடிய திருமணம் ( Marriage to be treated as invalid).**
- **வெற்றும் வெறிதுமான திருமணம் ( Null & Void Marriage ).**
- **வெறிதாகத்தகு திருமணம் ( Voidable Marriage ).**

## 01. திருமணம் ஒன்று வலிதற்றாகக் கருதப்படக்கூடிய சந்தர்ப்பங்கள் எவை?

1995ம் ஆண்டின் 18ம் இலக்க சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பதினெட்டு வயதுக்கு குறைந்த ஆண் பெண் இருவர்களுக்கிடையில் இடம்பெறும் திருமணம்.

சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் தடுக்கப்பட்ட நெருங்கிய உறவினர்களுக்கிடையில் இடம்பெறும் திருமணம்.

## 02. பொது திருமண கட்டளைச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் திருமணம் செய்வதில் இருந்து தடுக்கப்பட்ட நெருங்கிய உறவினர்கள் யார்?

திருமணம் செய்யும் இரு திறத்தவர்களில் ஒருவர் மற்றவரின் **நேரடி வழித்தோன்றலாக** இருப்பின்

திருமணப் பெண்ணானவள் முழுமையான அல்லது பகுதியளவிலான இரத்த உறவின் வழியான அவனது **சகோதரனின் அல்லது சகோதரியின் மகளாக** இருப்பின் அல்லது **அவ் இருவரில் ஒருவரின் வழித்தோன்றலாகவோ** அல்லது **அவனது மனைவி மற்றொரு தந்தையின் மூலம் பெற்ற மகளாக**, அல்லது **அவனின்**

**மகனின் அல்லது பேரனின் அல்லது தந்தையின் அல்லது பாட்டனின் விதவையின் மகளாக** இருப்பின்

திருமணத்துக்கான மணமகன் முழுமையான அல்லது பகுதியளவிலான இரத்த உறவின் வழியாக குறித்த திருமணத்திற்கான **மணப்பெண்ணின் சகோதரனாக** அல்லது முழுமையான அல்லது பகுதியளவிலான இரத்த உறவின் வழியாக **அவளது சகோதரனின் அல்லது சகோதரியின் மகளாக** இருப்பின், அல்லது **அவ் இருவரில் ஒருவரின் வழித்தோன்றலாகவோ** அல்லது **அவளது கணவன் மற்றொரு தாய் மூலம் பெற்ற மகனாக, அவளது இறந்த மகளின், பேத்தியின் அல்லது தாயின் அல்லது பாட்டியின் கணவனின் மகனாக** இருப்பின்

பொதுச்சட்டம் மற்றும் கண்டியசட்டத்தின் கீழ் மேற்கூறப்பட்டவர்களுக்கிடையிலான திருமணங்கள் வெற்றும் வெறிதானதுமாகும் அதாவது வலிதற்ற திருமணமாகும்.

## 03. பொது திருமண கட்டளைச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் செல்லுபடியற்றதாகக் கருதப்படும் திருமணங்கள் எவை?

திருமணம் செய்யும் திறத்தவர்களில் எவரேனும் ஒருவர் திருமணத்திற்குரிய ஆகக் குறைந்த வயதான 18 வயது என்ற வயதெல்லையை விட குறைவான வயதெல்லையாக இருப்பின் - ***பிரிவு 15***

திருமணம் செய்யும் திறத்தவர் ஒருவருக்கொருவர் தடுக்கப்பட்ட உறவு முறை உள்ளவர்களாக இருப்பின் - ***பிரிவு 16***

திருமணம் செய்யும் திறத்தவர்களில் எவரேனும் ஒருவர் ஏற்கனவே சட்டரீதியான திருமணம் ஒன்றை செய்திருந்து அத்திருமணம் நீதிமன்றத்தினால் சட்டரீதியாக குழைக்கப்படாத நிலையில் அல்லது வெற்றும் வெறிதானதுமென விளம்பல் செய்யப்படாத நிலையில் மீண்டும் திருமணம் ஒன்றை செய்திருப்பின் - ***பிரிவு 18***

திருமணம் செய்யும் திறத்தவர்கள் பின்வரும் சூழ்நிலைகள் பற்றி நன்கு அறிந்திருந்தும் குறித்த சூழ்நிலைகளில் வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட திருமணங்கள்

பொதுத் திருமணக்கட்டளைச் சட்டத்தினால் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்காத வேறு ஏதேனும் இடத்தில் வைத்து திருமணம் நடைபெற்றிருப்பின்

போலியான பெயர் அல்லது பெயர்களில் திருமணம் நடைபெற்றிருப்பின்

சட்ட ஏற்பாடுகளின் படி முறையாக வழங்கப்பட்ட முன் அறிவித்தல் சான்றிதழ் இன்றி திருமணம் நடைபெற்றிருப்பின்,

திருமண சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் திருமணத்தை நிறைவேற்ற அதிகாரம் அளிக்கப்படாத நபர் ஒருவர் மூலம் திருமணம் செய்து வைக்கப்பட்டிருப்பின்,

## 04. வெற்றும் வெறிதுமான ( Null & Void ) திருமணம் என்றால் என்ன?

ஒரு திருமணம் ஒன்று திருமணத்திற்குரிய சட்டத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட அடிப்படை தேவைப்பாடுகளை பின்பற்றாத நிலையில் நடைபெற்றிருக்குமாயின் அத் திருமணம் வெற்றும் வெறிதான திருமணமாக கருதப்படும்.

வெற்றும் வெறிதுமான திருமணம் எந்த சந்தர்ப்பத்திலும் வலிதான திருமணமாக மாற்றியமைக்கப்படமுடியாது.

உதாரணமாக : திருமணம் செய்து கொண்ட திறத்தவர்களில் ஒருவர் அல்லது இருவரும் திருமணம் செய்த நேரத்தில் திருமணம் செய்வதற்குரிய தகைமையை கொண்டிராது இருந்திருப்பின் அத்திருமணம் ஆரம்பத்தில் இருந்தே வெற்றும் வெறிதுமானதாகும்.

## 05. வெற்றும் வெறிதுமான ( Null & Void ) திருமணம் ஒன்றினால் ஏற்படும் விளைவுகள் எவை?

திருமணம் வெற்றும் வெறிதாக காணப்படுமாயின் திருமணம் செய்து கொண்ட திறத்தவர்கள் சட்டரீதியான வாழ்க்கைத் துணைவர்களாக கருதப்படமாட்டார்கள்.
திருமணம் செய்த பெண் ஆண் திறத்தவரிடமிருந்து எவ்விதமான உரிமைகளையும் பெற்றுக் கொள்ள இயலாது.

திருமணம் செய்த திறத்தவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் திருமணத்தின் காரணமாக பெறக்கூடிய உரிமைகள், சிறப்புரிமைகள் என்பவற்றை அனுபவிக்க இயலாது.

இத்தகைய திருமணத்தின் மூலம் பிறந்த பிள்ளைகள் திருமண உறவுக்கு புறம்பாக பிறந்த பிள்ளைகளாகவே ( Illegitamte Children ) கருதப்படுவார்கள்.

அவ்வாறான பிள்ளைகள் தந்தையுடைய வழியுரிமை சொத்துக்களுக்கு சட்டரீதியான உரித்துக்களை பெற்றுக் கொள்ளமுடியாது.

## 06. வெறிதாகத்தகு திருமணம் என்றால் என்ன?

வெறிதாகத்தகு திருமணம் என்பது விளம்பல் தீர்வை ஒன்றை வெளிப்படுத்துகின்ற நியாயாதிக்கம் கொண்ட நீதிமன்றம் ஒன்றினால் குறித்த திருமணம் வெற்றானதென தீர்வை பதியப்படும் வரையில் அத்திருமணம் செல்லுபடியான திருமணம் ஒன்றாக கருதப்படும்.

## 07. வெறிதாகத்தகு திருமணம் ( Voidable Marriage ) ஒன்றின் விளைவுகள் எவை?

குறித்த திருமணம் வெற்றானது என நீதிமன்றினால் தீர்வை பதியப்படும் வரையில் குறித்த மனைவி திருமணத்தின் பிரகாரம் மனைவிக்கு கணவனிடமிருந்து பெறக்கூடிய உரிமைகள், சிறப்புரிமைகள் என்பவற்றை அனுபவிக்க உரித்துடையவர்.

இத்தகைய திருமணத்தின் விளைவாக பிறந்த பிள்ளைகள் சட்டரீதியான திருமணத்தின் மூலம் பிறந்த பிள்ளைகளாக கருதப்படுவார்கள்.

# அத்தியாயம் - 3

- **விவாகரத்து** **(Divorce).**
- **திருமணக் குற்றங்கள்** **( Matrimonial Faults).**
- **விவாகரத்துக்கான வழக்குகள்** **( Divorce Actions) .**
- **நீதிமுறைப் பிரிவுக்கான வழக்குகள்** **( Action for Judicial Separation).**
- **பிரிமனைப் பணம்** **(Alimony);.**
- **மேன்முறையீட்டு நடபடிமுறைகள்** **( Appeal Procedure).**

## 01. திருமணம் ஒன்று எவ்வாறாக முடிவுறுத்தப்படுகின்றது?

**அ.** திருமணம் ஒன்றை வலிதற்றது என நீதிமன்றம் பிரகடனம் செய்வதன் மூலம்.

**ஆ.** நீதிமன்றம் பொது திருமண கட்டளைச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் விவாகரத்தை அனுமதிப்பதன் மூலம்.

**இ.** நீதிமன்றம் குடியியல் நடவடிக்கை முறைக் கோவையின் பிரிவுகள் 607 மற்றும் 608ல் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் விவாகரத்தை அனுமதிப்பதன் மூலம்.

## 02. ரோமன் - டச்சுச் சட்ட கோட்பாடுகளின் அடிப்படையில் திருமணம் ஒன்றை நீதிமன்றம் செல்லுபடியற்றதாக்கும் ஏனைய சந்தர்ப்பங்கள் எவை?

இலங்கையின் பொதுச்சட்டமான உரோமன் டச்சுச் சட்ட கோட்பாடுகளின் பிரகாரம் சுய விருப்பிலான சம்மதமின்மை, அச்சுறுத்தல், மோசடி மற்றும் பிழையான ஆள் அடையாளம்

போன்ற காரணிகள் திருமணம் ஒன்றை வெறிதாக்கத்தக்க அடிப்படைக் காரணிகளாக அங்கீகரித்துள்ளன.

## 03. விவாகரத்து என்றால் என்ன?

விவாகரத்து என்பது திருமண பந்தத்தில் இணைந்த ஒரு ஆணும் ஒரு பெண்ணும் தமது திருமண வாழ்க்கை உறவை முடிவுறுத்துகின்ற ஒரு செயற்பாடாகும். அதாவது விவாகரத்தின் மூலம் இவர்கள் இருவருக்குமிடையில் இடம்பெற்ற திருமணத்தை நீதிமன்றம் முடிவுறுத்தும்.

## 04. நீதிமன்றங்களினால் விவாகரத்து வழங்கப்படுவற்காக ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய திருமணக் குற்றங்கள் எவை?

- வன்ம உறவறுத்தல் - **Malicious Desertion.**
- சோர வாழ்க்கை - **Adultry Life.**
- குணப்படுத்தமுடியாத மலட்டுத்தன்மை - **Incurable Impotency.**

## 05 வன்ம உறவறுத்தல் (Malicious Desertion) என்றால் என்ன?

திருமண வாழ்க்கையில் இணைந்து கொண்ட குறித்த ஆண் அல்லது குறித்த பெண், தமது திருமண வாழ்க்கையை முடிவுறுத்த வேண்டுமென்ற எண்ணத்துடன் வன்மமான முறையில் செயற்படுதல். அதாவது ஒரு திறத்தவா் மறு திறத்தவர் மீது சித்திரவதை மற்றும் கொடூரமான செயற்பாடுகளை செய்வதுடன் திருமண இல்லத்தை விட்டு திருமண வாழ்க்கையை முடிவுறுத்த வேண்டுமென்ற எண்ணத்துடன் நிரந்தரமாக வெளியேற்றும் செயற்பாடானது வன்ம உறவறுத்தல் ஆகும்.

வன்ம உறவறுத்தல் ஆனது பின்வரும் இரண்டு முறைகளில் இடம்பெறமுடியும்:

நிகழ்வு ரீதியிலான வன்ம உறவறுத்தல் - Physical Malicious Desertion.

அமைவு வழியிலான வன்ம **உறவறுத்தல் - Constructive Malicious Desertion.**

## 06. நிகழ்வு ரீதியிலான வன்ம உறவறுத்தல் என்றால் என்ன?

திருமணம் செய்துள்ள இருதிறத்தவர்களில் ஒருவர் திருமண வாழ்க்கையை முடிவுறுத்தும் எண்ணத்துடன் மறு திறத்தவர் மீது கொடூரமான செயற்பாடுகள் மற்றும் சித்திரவதை செயற்பாடுகளை செய்துவிட்டு தானாகவே நிரந்தரமாக திருமண இல்லத்தை விட்டு நிரந்தரமாக வெளியேறிச்செல்லும் செயற்பாடு நிகழ்வு ரீதியிலான வன்ம உறவறுத்தல் எனப்படும்.

## 07. அமைவு வழியிலான வன்ம உறவறுத்தல் என்றால் என்ன?

திருமணம் செய்துள்ள இருதிறத்தவர்களில் ஒரு திறத்தவர் திருமண வாழ்க்கையை முடிவுறுத்தும் எண்ணத்துடன் மறு திறத்தவர் மீது கொடூரமான செயற்பாடுகள் மற்றும் சித்திரவதை செயற்பாடுகளை புரிவதன் காரணமாக, குறித்த மறுதிறத்தவர் திருமண இல்லத்தை விட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தி அவரை திருமண இல்லத்திலிருந்து வெளியேற்றுதல் அமைவு வழியிலான வன்ம உறவறுத்தல் எனப்படும்.

## 08. கணவனும் மனைவியும் ஒரே வீட்டில் வாழ்ந்து வருகின்ற சந்தர்ப்பத்தில் வன்ம உறவறுத்தல் என்ற திருமணக் குற்றம் இடம் பெறமுடியுமா?

ஆம், ஒரே வீட்டில் வாழ்ந்து வருகின்ற சந்தர்ப்பத்திலும் ஒரு திறத்தவர் திருமண வாழ்க்கையை முடிவுறுத்தும் எண்ணத்துடன் மறு திறத்தவர் மீது கொடூரமான செயற்பாடுகள் மற்றும் சித்திரவதை செயற்பாடுகளை புரிவதன் காரணமாக, வன்ம உறவறுத்தல் என்ற திருமணக் குற்றம் இடம் பெறமுடியும்.

## 09. சோர வாழ்க்கை (Adultry Life) என்றால் என்ன?

திருமண வாழ்க்கையில் இணைந்துள்ள கணவன் ஒருவர் தனது மனைவியல்லாத வேறொருவருடன் தொடர்ந்து தாம்பத்திய வாழ்க்கையில் அதாவது உடலுறவில் ஈடுபட்டு வாழ்க்கை நடாத்தல் சோரம் போதல் அல்லது சோர வாழ்க்**கை** எனப்படும் அதே போன்று திருமண வாழ்க்கையில் இணைந்துள்ள மனைவி ஒருவர் தனது கணவன் அல்லாத வேறொரு ஆணுடன் தொடர்ந்து தாம்பத்திய வாழ்க்கை நடாத்துதல் சோர வாழ்க்கை எனப்படும்.

## 10. குணப்படுத்த முடியாத ஆண்மையீனம் அல்லது மலட்டுத் தன்மை (Incurable Importency ) என்றால் என்ன?

திருமணம் நடைபெற்ற வேளையில் கணவன் அல்லது மனைவிக்கு தாம்பத்திய வாழ்க்கையில் ஈடுபட முடியாதவாறு நிரந்தர பலவீனம் உடையவர்களாக இருந்துள்ளதுடன் அதாவது மருத்துவ சிகிச்சையேதும் பலனின்றி நிரந்தரமாக தொடர்ந்தும் அவ்வாறான பலவீனம் உள்ளவராக இருக்கும் நிலை குணப்படுத்தமுடியாத ஆண்மையீனம் அல்லது மலட்டுத்தன்மை **(Incurable Importency )** எனப்படுகின்றது.

திருமணம் நடைபெற்ற வேளையில் இருந்து நிரந்தரமான மலட்டுத்தன்மை உள்ளது என்பது எண்பிக்கப்படும் பட்சத்திலேயே அது ஒரு திருமணக் குற்றமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு விவாகரத்து வழங்கப்படும்.

## 11. மலட்டுத்தன்மை என்பது ஆணுக்கு மட்டுமே ஏற்புடையதான விடயமா?

இல்லை, இது ஆண் மற்றும் பெண் ஆகிய இருபாலாருக்கும் ஏற்புடையதான விடயமாகும்.

## 12. விவாகரத்து வழக்கு ஒன்று எந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படல் வேண்டும்?

திருமண வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள திறத்தவர்களில் எவர் விவாகரத்து வழக்குத் தாக்கல் செய்ய வரும்புகின்றாரோ அவர் நிரந்தரமாக வசித்துவருகின்ற பிரதேசத்தில் அமைந்துள்ள மாவட்ட

நீதிமன்றத்தில் அத்தகைய விவாகரத்து வழக்கு தாக்கல் செய்யப்பட முடியும்.

## 13. விவாகரத்து வழக்கு ஒன்றை யார் தாக்கல் செய்ய முடியும்?

திருமணம் நடைபெற்று தாம்பத்திய வாழ்க்கை ஒன்றை நடாத்தி வந்துள்ள ஆண் மற்றும் பெண் ஆகிய இருவரில் எவரேனும் ஒருவர் விவாகரத்து வழக்கை தாக்கல் செய்ய முடியும்.

## 14. பொது திருமண கட்டளைச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் விவாகரத்து வழக்கு ஒன்றை தாக்கல் செய்யும் ஒருவர் எத்தகைய நடவடிக்கை முறையினைப் பின்பற்ற வேண்டும்?

விவாகரத்து வழக்கொன்றை தாக்கல் செய்ய விரும்புபவர் ஒரு சட்டத்தரணியினூடாக அல்லது தானாக முன் சொல்லப்பட்ட திருமணக் குற்றங்களில் ஏதேனும் ஒன்றினை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு, அவர் நிரந்தரமாக வசிக்கும் பிரதேசத்தில் உள்ள மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கைத் தாக்கல் செய்ய முடியும்.

## 15. குடியியல் நடவடிக்கை முறை பிரிவு 607 இன் கீழ் திருமணம் செய்த திறத்தவர்கள் அவர்களது திருமணம் தொடர்பில் எத்தகைய வழக்கைத் தாக்கல் செய்ய முடியும்?

இலங்கையில் நடைமுறையிலிருக்கும் சட்ட ஏற்பாடுகளுக்கமைய குறித்த திருமணம் வெற்றும் வெறிதானதுமென விளம்பல் செய்யும் கட்டளையை கோரி வழக்குத்தாக்கல் செய்யப்படமுடியும். இங்கு நடைமுறையிலிருக்கும் சட்டம் என்பது பின்வருவனவற்றை உள்ளடக்கும்.

பொதுத்திருமணக்கட்டளைச் சட்ட ஏற்பாடுகள்

இலங்கையின் பொதுச்சட்டமான உரோம டச்சுச் சட்ட கோட்பாடுகள்.

திருமணம் குலைக்கப்படாமல் பிரிந்து வாழ்வதை அனுமதிப்பதான நீதிமுறைப்பிரிவுக் ( **Judicial Separation** ) கட்டளையை கோரி வழக்குத்தாக்கல் செய்யப்படமுடியும்.

**16. உறக்கத்திலிருந்து பிரிந்து வாழ்வதற்கான வழக்கு எவ்வாறாக தாக்கல் செய்யப்பட வேண்டும்?**

குடியியல் நடவடிக்கைக் கோவையின் பிரிவு 607ல் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நீதிமுறைப் பிரிவிடல் கட்டளை ஒன்றிற்கான விண்ணப்பம் செய்வதன் மூலம் இத்தகைய வழக்கொன்றை தாக்கல் செய்யமுடியும்.

விண்ணப்பிக்கும் திறத்தவர் வாழ்கின்ற பிரதேசத்தில் அமைந்துள்ள மாவட்ட நீதிமன்றத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

நீதிமுறைப்பிரிவிடல் கட்டளையை நீதிமன்றம் பிறப்பிப்பதன் மூலம் ஊன், உறக்கத்திலிருந்து பிரிந்து வாழ்வதற்கான அனுமதியை நீதிமன்றம் வழங்குவதன் காரணமாக கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலான திருமண வாழ்க்கையானது தற்காலிகமாக இடை நிறுத்தப்படும்.

கணவனும் மனைவியும் மீண்டும் சேர்ந்து வாழ விரும்பின் அதே திருமணத்தின் கீழ் அவர்கள் சேர்ந்து வாழ்வதுடன் அவருடைய திருமணம் நிலைத்து நிற்கும்.

**17. மேற்குறித்தவாறாக நீதிமுறை பிரிவிடல் கட்டளை வழக்கை தாக்கல் செய்வதற்கான அடிப்படைக் காரணிகள் எவை?**

திருமணத்தின் பின்னரான சோர வாழ்க்கை

வன்ம உறவறுத்தல்

திருமணத்தின் போதான குணப்படுத்தமுடியாத மலட்டுத்தன்மை

மேலே குறிப்பிடப்பட்ட மூன்று காரணிகளின் ஒன்றின் அடிப்படையில் ஊன் உறக்கத்திலிருந்து பிரிந்து வாழ்வதற்கான நீதிமுறைப்பிரிவிடல் கட்டளையை பெறமுடியும்.

மேற்குறிப்பிடப்பட்ட காரணிகளுக்கு மேலதிகமாக, ‘தாங்கமுடியாத மிகவும் கொடூரமான செயற்பாடுகள்’ எனும் காரணத்தின் அடிப்படையிலும் இத்தகைய நீதிமுறையான பிரிவிடல் கட்டளையொன்றை கோரிப் பெற்றுக் கொள்ளமுடியும்.

**18. நீதிமுறை பிரிவிடல் கட்டளையொன்றை நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்து அதனை இரத்துச் செய்வதற்கான கட்டளையொன்றை பெறமுடியுமா?**

ஆம்.

எந்த நீதிமன்றம் கட்டளையை பிறப்பித்ததோ அந்த நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்து இருவரும் மீண்டும் சேர்ந்து வாழ்வதனை எண்பித்து அத்தகைய கட்டளையொன்றை பெறமுடியும். அவ்வாறாக இருவரும் மீண்டும் சேர்ந்து வாழும் போது அவரது முன்னைய திருமணம் நிலைத்து நிற்பதாகவே கருதப்படும்.

**19. நீதிமுறை பிரிவிடல் கட்டளையொன்றை பெற்றுள்ள திறத்தவர் அந்த கட்டளையின் அடிப்படையில் அந்தக் கட்டளையை ஒரு காரணியாகக் கொண்டு விவாகரத்து வழக்கு தாக்கல் செய்யமுடியுமா?**

ஆம்.

குடியியல் நடவடிக்கை முறைக்கோவையின் பிரிவு 608 (2) உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அத்தகைய நீதிமுறைப்பிரிவிடல் கட்டளை வழங்கப்பட்ட காலப்பகுதியிலிருந்து இரண்டு வருடங்கள் கழிந்த பின்பு கணவனும் மனைவியும் சேர்ந்து வாழக்கூடிய சூழ்நிலைகள் ஏற்படவில்லை என்பதை எண்பித்து அதன் அடிப்படையில் திருமண திறத்தவர்களில் எவராவது ஒருவர் விவாகரத்தைக் கோரி பெற்றுக்கொள்ள முடியும்.

**20. குடியியல் நடவடிக்கைக் கோவையின் பிரிவு 608(2) இல் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வேறு ஏதேனும் காரணியின் அடிப்படையில் விவாகரத்து வழக்கொன்றை தாக்கல் செய்யமுடியுமா?**

திருமண திறத்தவர் ஒருவர் அதாவது கணவன் மற்றும் மனைவியாகிய இருவரும் தொடர்ந்து ஏழு வருடங்களுக்கு மேலாக ஊன் உறக்கத்திலிருந்து பிரிந்து வாழ்ந்து வருகின்றார்கள் என்பதை எண்பிப்பதன் மூலம் திருமண திறத்தவர்களில் எவரேனும் ஒருவர் விவாகரத்து வழக்கொன்றை தாக்கல் செய்து நீதிமன்றின் மூலம் விவாகரத்து கட்டளையை பெறமுடியும்.

ஆனால் அண்மைக்காலத்தில் நீதித்துறையால் ஏற்படுத்தப்பட்ட தீர்ப்புச் சட்ட வளர்ச்சியை நோக்கும் போது, திருமணக் குற்றமொன்றை புரிந்துள்ள திறத்தவர் ஒருவர் இத்தகைய விவாகரத்து வழக்கொன்றை தாக்கல் செய்து விவாகரத்து கட்டளையொன்றை பெறுவதற்கு உரித்துடையவரல்ல என்ற ஒரு மட்டுப்பாட்டை அது ஏற்படுத்தியுள்ளது.

## 21. விவாகரத்து வழக்கு ஒன்றை தாக்கல் செய்ய விரும்பும் ஒருவர் எத்தகைய சாட்சியங்களை தயார்படுத்தல் வேண்டும்?

திருமணப்பதிவுப்பத்திரத்தின் மூலப்பிரதியை கைவசம் வைத்திருத்தல் வேண்டும்.

திருமணக்குற்றம் தொடர்பான விடயங்களை நேரில் அறிந்தவர்களை சாட்சியங்களாக நீதிமன்றத்திற்கு அழைப்பதற்கு தயார் செய்தல் வேண்டும்.

திருமணக்குற்றம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் ஏற்கனவே முறைப்பாடு எதுவும் செய்திருந்தால் அத்தகைய முறைப்பாட்டின் பிரதி கைவசம் வைத்திருத்தல் வேண்டும்.

விவாகரத்து வழக்கின் போது பிள்ளைகளின் பாதுகாப்பையும் கட்டுக்காவலையும் கோருவதாக இருப்பின் பிள்ளைகளின் பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்களை கைவசம் வைத்திருத்தல் வேண்டும்.

## 22. விவாகரத்து வழக்கு ஒன்றை தாக்கல் செய்வதற்கான கால எல்லை மட்டுப்பாடு எதுவும் உண்டா?

அவ்வாறாக கால எல்லை மட்டுப்பாடு எதுவும் இல்லை. காலவிதிப்புச் சட்டத்தின் பிரிவு 15 ( Section 15 of the Prescription Ordinance ) பிரகாரம் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்வதற்குரிய கால எல்லை பற்றி எதுவும் எடுத்துரைக்கப்படவில்லை. எனவே விவாகரத்து வழக்கு காலம் தாழ்த்தி போடப்பட்டாலும் அவ்வழக்கின் மூலம் நிவாரணம் பெறுவது தொடர்பில் காலவிதிப்புச் சட்டம் எவ்விதமான தாக்கத்தையும் செலுத்தமாட்டாது.

விவாகரத்துக்கு அடிப்படையாக அமையக்கூடிய திருமணக் குற்றங்கள் தொடர்பான செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்ற ஒரு விடயமாக காணப்படுகின்றமையால் கால வரையறை என்ற வினா, விவாகரத்து வழக்கில் பொதுவாக ஏற்படுவதில்லை.

**23. கணவன் மற்றும் மனைவி இருவரும் நீதிமன்றின் முன்னிலையில் பரஸ்பர சம்மதத்தை தெரிவித்து விவாகரத்தை பெற்றுக்கொள்ள முடியுமா?**

எமது சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் அத்தகைய பரஸ்பர சம்மதத்தின் பிரகாரம் விவாகரத்தை பெற்றுக் கொள்ள முடியாது.

**24. பிரிமனைப்பணம் ( Alimony ) என்றால் என்ன?**

விவாகரத்து வழக்கொன்றில் சம்பந்தப்பட்ட திறத்தவர்களில் ஒரு திறத்தவரால் மற்றைய திறத்தவருக்கு நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் வழங்கப்படும் நாளாந்த வாழ்க்கைச் செலவிற்கான கொடுப்பனவே பிரிமனைப்பணமாகும்.

**25. வழக்கின் போதான பிரிமனைப்பணம் ( Alimony Pendente lite ) என்றால் என்ன?**

விவாகரத்து வழக்கு ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கையில் அவ்வழக்கு முடிவதற்கு முன்பதாக அதாவது வழக்கு நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் ஒரு திறத்தவரால் மற்ற திறத்தவருக்கு மாதாந்தம் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவிற்கான பணம்

வழக்கின் போதான பிரிமனைப்பணம் **( Alimony Pendente lite )** என அழைக்கப்படும்

## 26. நிரந்தரப் பிரிமனைப்பணம் ( Permanent Alimony ) என்றால் என்ன?

விவாகரத்து வழக்கொன்றில் நீதிமன்றினுடைய இறுதித்தீர்ப்பின் பிரகாரம் ஒரு திறத்தவர் மறு திறத்தவருக்கு அவரது வாழ்க்கைச் செலவிற்காக வழங்கப்படும் முழுமையான ஒரு தொகைப் பணம் நிரந்தர பிரிமனைப்பணம் எனப்படும்

## 27. மனைவியிடம் இருந்து பிரிமனைப்பணம் கோருவதற்கு கணவனுக்கு உரிமை உண்டா?

ஆம், மனைவியிடமிருந்து தனது சீவியத்தை கொண்டு நடாத்த முடியாத நிலையில் உள்ள கணவன் போதிய வசதியுடன் வாழ்ந்து வரும் மனைவியிடம் அத்தகைய பிரிமனைப்பணத்தை கோர முடியும்.

## 28. விவாகரத்து வழக்கு ஒன்றை தாக்கல் செய்யும் ஒருவர் விவாகரத்தை வழங்குமாறு கோருவதுடன், அதே வழக்கில் வேறு எத்தகைய நிவாரணங்களை கோரமுடியும்?

வழக்கைத் தாக்கல் செய்பவருக்கும் எதிராளிக்கும் இடையில் தாம்பத்திய வாழ்க்கை மூலம் பிள்ளைகள் பிறந்திருப்பின் குறித்த பிள்ளைகளின் பாதுகாப்பையும் கட்டுக்காப்பையும் கோர முடியும்

பிரிமனைப்பணம் கோர முடியும்

திருமணத்தின் போது மறுதிறத்தவருக்கும் வழங்கப்பட்ட அசையும் அசையா சொத்துக்களை கோர முடியும்

## 29. விவாகரத்துக்கோரி வழக்கு ஒன்றை தாக்கல் செய்யும் ஒருவர், அதேவழக்கில் தமது பிள்ளைகளின் கட்டுக்காவலை தனக்கு வழங்குமாறு கோரமுடியுமா?

ஆம், அவ்வாறாகக் கோர முடியும்

## 30. நீதிமுறைப் பிரிவு என்றால் என்ன?

குடியியல் நடவடிக்கைக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொதுச்சட்டத்தின் கீழ் எமது நாட்டில் நடைமுறையில் உள்ள சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் திருமணக்குற்றங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்ட காரணிகளின் அடிப்படையில் கணவன் மனைவியிடத்தில் இருந்து அல்லது மனைவி கணவனிடத்திலிருந்து திருமணம் குலைக்கப்படாமல் பிரிந்து வாழ்வதை அனுமதிப்பதான நீதிமன்றக் கட்டளை மூலம் பிரிந்து வாழ்வது அனுமதிக்கப்படுமாயின் அது நீதிமுறைப்பிரிவு எனப்படும்.

## 31. விவாகரத்தை அனுமதிப்பதான கட்டளை ஒன்றுக்கும் நீதிமுறைப் பிரிவை அனுமதிப்பதான கட்டளை ஒன்றுக்கும் இடையிலான முக்கியமான வேறுபாடு என்ன?

விவாகரத்தின் மூலம் குறித்த கணவன் மனைவிக்கிடையிலான திருமணம் நீதிமன்றத்தினால் குழைக்கப்பட்டு விவாகரத்து வழங்கப்படுகின்றது.

நீதிமுறைப்பிரிவிடல் கட்டளையின் மூலம் குறித்த கணவனுக்கும் மனைவிக்குமிடையிலான திருமணம் நீதிமன்றத்தினால் குழைக்கப்படமாட்டாது. ஆனால் அவர்கள் இருவரும் சட்டரீதியாக பிரிந்து வாழ்வதற்கான அனுமதியை மட்டுமே நீதிமன்றம் வழங்குகின்றது.

## 32. நீதிமுறைப் பிரிவுக்கு ( Judicial Separation ) ஏற்பாடு செய்யும் சட்ட ஏற்பாடுகள் எவை?

குடியியல் நடவடிக்கைக் கோவையின் பிரிவு 607 (2) நீதிமுறைப்பிரிவுக்கான கட்டளையை பெறுவதற்கான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது.

குடியியல் நடவடிக்கைக் கோவையின் பிரிவு 607 (2) இன் பிரகாரம் பொதுச்சட்டத்தின் கீழ் எமது நாட்டில் நடைமுறையில் உள்ள சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் திருமணக்குற்றங்களாக

ஏற்றுக்கொள்ளப்பட்ட காரணிகளின் அடிப்படையில் கணவன் மனைவியிடத்தில் இருந்து அல்லது மனைவி கணவனிடத்திலிருந்து பிரிந்து வாழ்வதை அனுமதித்து நீதிமன்றம் கட்டளையை வழங்கும்.

## 33. நீதிமுறைப் பிரிவுக் கட்டளையின் அடிப்படையில் பிரிந்து வாழ்ந்து வரும் ஆணும் பெண்ணும் சட்டத்தின் பிரகாரம் கணவன் மனைவியாக சேர்ந்துவாழ முடியுமா?

நீதிமுறைப்பிரிவின் பிரகாரம் குறித்த கணவனுக்கும் மனைவிக்குமிடையிலான திருமணம் குழைக்கப்படாத காரணத்தினால் அவர்கள் அதே திருமணத்தின் கீழ் மீண்டும் கணவன் மனைவியாக சேர்ந்து வாழ முடியும்.

## 34. நீதிமன்றினால் குறித்த வழக்கொன்றில் விவாகரத்து வழங்கப்பட்ட அதே ஆணும் (கணவன்) பெண்ணும் (மனைவி) சட்டத்தின் பிரகாரம் மீண்டும் சட்டரீயாக பதிவுத் திருமணம் செய்துகொள்ள முடியுமா?

ஆம், அவ்வாறாக மீண்டும் பதிவுத்திருமணம் செய்து கொள்வதற்கு சட்டத்தில் எவ்வித தடையும் இல்லை. ஏனெனில் அவர்கள் இருவருக்குமிடையிலான முன்னைய திருமணமானது நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் குழைக்கப்பட்டுள்ளது.

ஆனால் முன்னைய திருமணமானது நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் குழைக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதான நீதிமன்றின் இறுதி தீர்வையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி குறித்த பிரதேச மேலதிகப்பதிவாளிரடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். .

## 35. நீதிமன்றினால் குறித்த வழக்கொன்றில் விவாகரத்தை அனுமதித்து தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் வழக்கின் திறத்தவர்களால் எத்தகைய தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்?

பின்முற்றாகும் தீர்வை பதியப்படல் வேண்டும்

பின்முற்றாகும் தீர்வையின் பிரதி மறுதிறத்தவருக்கு சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பின்முற்றாகும் தீர்வை மறுதிறத்தவருக்கு சேர்க்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்பு முற்றான தீர்வை பதிவதற்கான விண்ணப்பத்தை மேற்கொள்ள வேண்டும்.

முற்றான தீர்வை பதிந்த பின்பே விவாகரத்து பெற்ற திறத்தவர்கள் எவரேனும் மீண்டும் வேறொரு திருமணத்தை மேற்கொள்ள முடியும்.

## 36. நீதிமன்றினால் குறித்த வழக்கொன்றில் விவாகரத்தை அனுமதித்து தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் வழக்கின் திறத்தவர் ஒருவர் மீண்டும் திருமணம் செய்துகொள்ள விரும்பின் அவர் எத்தகைய நடவடிக்கை முறையினைப் பின்பற்ற வேண்டும்?

அவர்கள் பொதுத்திருமணக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளைப் பின்பற்றி மீண்டும் திருமணம் செய்து கொள்ள முடியும். திருமணப்பதிவிற்கான முன் அறிவித்தல் கொடுக்கும் போது ஏற்கனவே மேலதிக மாவட்டப்பதிவாளரிடம் நீதிமன்றத்தினால் விவாகரத்தை அனுமதித்து வழங்கப்பட்ட தீர்வையின் பிரதி கையளிக்கப்பட வேண்டும்.

பின்முற்றாகும் தீர்வை மறுதிறத்தவருக்கு சேர்க்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்பு முற்றான தீர்வை பதியப்படும் வரையில் அவர் காத்திருக்க வேண்டும். முற்றான தீர்வை பதியப்பட்டபின்பு திருமணத்தை மேற்கொள்ள முடியும்.

## 37. பின்முற்றாகும் தீர்வை பதியப்பட்டு மறுதிறத்தவருக்கு அது சேர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிவதற்கு முன்னர் ஒருதிறத்தவர் மீண்டும் திருமணம் செய்துகொண்டால் அத்திருமணத்தின் விளைவுகள் யாது?

அத்திருமணம் சட்டப்படி செல்லுபடியற்றதாக அல்லது வலிதற்றதாகக் கருதப்படும்.

அவ்வாறாக ஒருதிறத்தவர் மீண்டும் திருமணம் செய்துகொண்டால் அவர் இலங்கைத் தண்டனைச் சட்டக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் இருதார திருமணக் குற்றம் புரிந்ததாக குற்றம் சுமத்தப்படலாம்.

**38. மாவட்ட நீதிமன்றினால் வழக்காளியின் விவாகரத்து வழக்கு ஒன்று தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்படின், அதேநபர் (வழக்காளி) புதிய விவாகரத்து வழக்கு ஒன்றினை மீண்டும் தாக்கல் செய்யமுடியுமா?**

ஆம், புதிய வழக்கெழு காரணத்தின் (New Cause of Action) அடிப்படையில் அல்லது முன்னைய வழக்கில் முன்வைக்காத வேறு ஒரு வழக்கெழு காரணத்தின் அடிப்படையில் மீண்டும் விவாகரத்து வழக்கொன்றை தாக்கல் செய்ய முடியும்.

**39. கணவன் அல்லது மனைவி காணாமல் போனால் அதாவது பல வருடங்களுக்கு மேலாக அவனைப்பற்றி அல்லது அவளைப்பற்றி எந்தவித தகவல்களும் கிடைக்கப்பெறாத நிலையில் குறித்த கணவன் அல்லது மனைவி மீண்டும் ஒரு திருமணத்தை செய்து கொள்ள முடியுமா?**

குறித்த கணவன் அல்லது மனைவியின் முன்னைய திருமணமொன்று நிலைத்திருக்கும் பொழுது இன்னொரு திருமணத்தை செய்து கொள்ளமுடியாது. முன்னைய திருமணம் நிலைத்திருக்கையில் இன்னொரு திருமணமானது செய்து கொள்வதானது தண்டனைச் சட்டக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தண்டனை வழங்கப்படக்கூடிய குற்றமாகும்.

குறித்த கணவன் அல்லது மனைவி ஏழு வருடங்களிற்கு மேலாக பிரிந்து வாழ்ந்து வருகின்ற பொழுது அக்காலப்பகுதியில் கணவன் அல்லது மனைவிக்கு தனது வாழ்க்கைத்துணை உயிருடன் இருக்கின்றாரா என்பது பற்றி தகவல் எதுவும் கிடைக்கப்பெறாத நிலையில் குறித்த கணவன் அல்லது மனைவி இறந்து விட்டதாக ஊகம் கொள்ளப்படமுடியும் என்பதான விளம்பல் கட்டளையொன்றை பெறுவதற்கான வழக்கைத் தாக்கல் செய்து அத்தகைய கட்டளையைப் பெறல் வேண்டும். அவ்வாறு விளம்பல் கட்டளையை பெற்றதன் பின்பு அதை விவாகப்பதிவாளரிடம் சமர்ப்பித்து உரிய திருமணத்தை செய்து கொள்ளமுடியும்.

## 40. ஒரு திருமணம் தொடர்பான திருமணப்பதிவுப்பத்திரத்தில் குறித்த திருமணத்தில் திறத்தவர்களாக அல்லாத வேறு எவரும் பெற்றுக்கொள்ளமுடியுமா?

ஆம், குறித்த திருமணப்பத்திரம் ஒரு பகிரங்க ஆவணம் (Public Document ) என்பதனால் எந்தவொரு நபரும் எந்தவொரு திருமணம் தொடர்பான திருமணப்பதிவுப்பத்திரத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியை பதிவாளர் காரியாலயத்திலிருந்து உரிய முத்திரைக்கட்டணத்தை செலுத்தி பெற்றுக் கொள்ளமுடியும்.

## 41. குடும்ப சச்சரவு காரணமாக மனைவி கணவன் வீட்டிலிருந்து வெளியேறி தனது பெற்றோர் இல்லத்திற்கு சென்று வசிப்பாராயின் அச்சந்தர்ப்பத்தில் வன்ம உறவறுத்தல் ஏற்படுகின்றதா?

இங்கு திருமணத்தை குலைப்பதற்கான மன எண்ணம் மனைவியிடம் இல்லாததனால் வன்ம உறவறுத்தல் இல்லை

## 42. திருமணத்தை பூரணமாக்குதல் என்றால் என்ன?

விவாகம் பதிவு செய்யப்பட்ட பின் கணவன் மனைவி இருவரும் உடலுறவில் ஈடுபட்ட பின்னர் திருமணம் பூரணமாகும்.

## 43. ஆண் மற்றும் பெண்ணுக்கிடையில் விவாகம் பதிவு செய்யப்பட்ட பின்னர் கணவன், மனைவியை திருமணத்தை பூரணமாக்குதற்கு அழைக்கும்போது மனைவி நிராகரப்பின் ஏற்படும் நிலைமை என்ன?

குறித்த திருமணம், வெற்றும் வெறிதுமான **( Null & Void )** எனும் நீதிமன்ற கட்டளையின் மூலம் முடிவுறுத்தப்படலாம்.

## 44. கணவன் மனைவி இருவரும் வேறுபட்ட விவாகரத்து குற்றங்களை புரிந்துள்ளவிடத்து நிலைமை யாது?

உரிமைமீமறல் தொடர்பில் நிவாரணம்கோரி நீதிமன்றத்திற்கு வரும் நபர்கள் தூய கரங்களுடன் வரவேண்டும் என்பது பொதுவான கோட்பாடாகும். எனவே அத்தகைய சந்தர்ப்பத்தில் நீதிமன்றம் இக்கோட்பாட்டை கவனத்திற் கொள்ளும்.

## 45. மாவட்ட நீதிமன்றினால் மன்றின் தீர்ப்புக்கெதிராக மேன்முறையீடு செய்ய முடியுமா?

ஆம், மாவட்ட நீதிமன்ற தீர்ப்பில் திருப்தியடையாத எந்தவொரு திறத்தவரும் அத்தீர்ப்பிற்கெதிராக மேன்முறையீடு ஒன்றை செய்யமுடியும். மாகாண சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யப்படல் வேண்டும்

## 47. மேன்முறையீடு செய்ய வேண்டுமாயின் எத்தகைய தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்?

தீர்ப்பு வழங்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் மேன்முறையீடு செய்வது தொடர்பான அறிவித்தல் மாவட்ட நீதிமன்றத்தில் கொடுக்கப்படல் வேண்டும். குறித்த அறிவித்தலின் பிரதி பதிவுத்தபால் மூலம் எதிர் தரப்பினருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

குடியியல் நடவடிக்கை சட்ட ஏற்பாடுகளுக்கமைவாக உரிய பிணைமுறி செய்து கொள்ளப்படுதல் வேண்டும்.

மேன்முறையீட்டிற்கான அறிவித்தல் மன்றில் சமர்ப்பிக்கப்படும் பொழுது அறிவித்தலின் பிரதி மறுதிறத்தவருக்கு அனுப்பி வைப்பதனை உறுதிப்படுத்தும் பதிவுத்தபால் பற்றுச்சீட்டும் மன்றில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்

தீர்ப்பு வழங்கப்பட்ட திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் மேன்முறையீட்டு விண்ணப்பமானது மாவட்ட நீதிமன்றத்தில் அணைக்கப்படுதல் வேண்டும்.

## 50. மாகாண குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றித்தினால் வழங்கப்படும் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட முடியுமா?

ஆம். அத்தகைய தீர்ப்பின் மீது திருப்தியடையாத எந்த ஒரு திறத்தவரும் அத்தீர்ப்புக்கு எதிராக சட்ட விடயத்தினனை (ON POINT OF LAW ) அடிப்படையாகக் கொண்டு உயர் நீதிமன்றிற்கு மேன்முறையீடு செய்யலாம்.

## 51. அத்தகைய மேன்முறையீட்டினை எத்தனை நாட்களுக்குள் செய்ய வேண்டும்?

மேன்முறையீடு தொடர்பான தீர்ப்பு வழங்கப்பட்ட திகதியிலிருந்து 06 வாரங்களுக்குள் செய்யப்படல் வேண்டும்.

மாகாண குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றித்தினால் வழங்கப்படும் தீர்ப்பின்மீது திருப்தியடையாத எந்த ஒரு திறத்தவரும் அத்தீர்ப்புக்கு எதிராக சட்ட விடயத்தினை (ON POINT OF LAW ) அடிப்படையாகக் கொண்டு உயர் நீதிமன்றில் மேன்முறையீட்டுக்கான முன்அனுமதி ( LEAVE TO APPEAL ) பெறப்படல் வேண்டும்.

## 53. உயர் நீதிமன்றித்தினால் வழங்கப்படும் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட முடியுமா?

உயர் நீதிமன்றமே எமது நாட்டு நீதிமன்றங்களில் அதி உச்சஸ்தானத்தில் உள்ள நீதிமன்றமாகவும் இறுதியான மேன்முறையீட்டு நீதிமன்றமாகவும் விளங்குகின்றது. எனவே உயர் நீதிமன்றித்தினால் வழங்கப்படும் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட முடியாது.

# அத்தியாயம் - 4.

- **திருமண வாக்குறுதி (Promisse of marriage).**
- **திருமண வாக்குறுதி மீறலின் விளைவுகள்**
  **( Consequences of breach of promises of Marriage).**
- **திருமண வாக்குறுதி மீறல் தொடர்பான வழக்குகள்**
  **(Actions relating to breach of promises of Marriage).**

## 01. திருமண வாக்குறுதி (Promisse of Marriage) என்றால் என்ன?

ஒரு திறத்தவர் இன்னொரு திறத்தவருக்கு தான் அவரை திருமணம் செய்வதாக வாக்குறுதி அளித்தல் திருமண வாக்குறுதி ஆகும்.

## 02. திருமண வாக்குறுதி ஒன்றின் தேவைப்பாடுகள் எவை?

1907ம் ஆண்டின் 19 ம் இலக்க பொது திருமண கட்டளைச்சட்டத்தின் பிரிவு 20 இல் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் திருமண வாக்குறுதி ஒன்றானது எழுத்தில் இருத்தல் வேண்டும்.

## 03. திருமண வாக்குறுதி ஒன்றினை மீறிச் (Breach of Promisse of Marriage) செயற்படும் ஒருவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட முடியுமா?

திருமண வாக்குறுதி ஒன்று எழுத்தில் இருந்தால் மட்டுமே அத்தகைய திருமண வாக்குறுதி ஒரு திறத்தவரால் மீறப்பட்டிருப்பின் அவருக்கெதிராக இழப்பீடு கோரி வழக்கொன்றை தாக்கல் செய்ய முடியும்.

## 04. அத்தகைய வழக்கு ஒன்று எந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படல் வேண்டும்?

திருமண வாக்குறுதி மீறலுக்கு எதிரான வழக்கு தாக்கல் செய்யும் நபர் எப்பிரதேசத்தில் நிரந்தரமாக வசிக்கின்றாரோ அப்பிரதேசத்தில் அமைந்துள்ள மாவட்ட நீதிமன்றத்தில் இழப்பீட்டை கோரி வழக்கை தாக்கல் செய்ய முடியும்.

## 05. அத்தகைய வழக்கு ஒன்றை யார் தாக்கல் செய்ய முடியும்?

திருமண வாக்குறுதி மீறலின் காரணமாக பாதிக்கப்பட்ட நபர் அதாவது யாருக்கு திருமண வாக்குறுதி வழங்கப்பட்டதோ அவரே அத்தகைய வழக்கை தாக்கல் செய்யமுடியும்

## 06. அத்தகைய வழக்கு ஒன்றை எத்தனை நாட்களுக்குள் தாக்கல் செய்யவேண்டும்?

திருமண வாக்குறுதி மீறப்பட்ட தினத்திலிருந்து 02 வருட காலத்திற்குள் அத்தகைய வழக்கை தாக்கல் செய்யமுடியும்.

## 07. திருமண வாக்குறுதி மீறல் வழக்கு ஒன்றில், எதிராளியால் எழுதப்பட்ட காதல் கடிதத்தை நீதிமன்றம் சான்றாக ஏற்றுக்கொள்ளுமா?

ஆம், அத்தகைய காதல் கடிதம் சான்றாக ஏற்றுக்கொள்ளப்படும். குறித்த காதல் கடிதமானது திருமண வாக்குறுதி ஒன்று

வழங்கப்பட்டுள்ளது என்பதனை தெளிவாக காட்டுவதாக இருத்தல் வேண்டும்.

## 08. அத்தகைய வழக்கு ஒன்றை தாக்கல் செய்பவர் எத்தகைய சாட்சியங்களை தயார்படுத்தல் வேண்டும்?

திறத்தவர்களுக்கிடையில் பரிமாறப்பட்ட கடிதங்கள், வாழ்த்து அட்டைகள் சில சந்தர்ப்பங்களில் திருமண அழைப்பிதழ் கூட நீதிமன்றினால் சான்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

## 09. திருமண வாக்குறுதி ஒன்றினை மீறிச் செயற்படும் ஒருவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்பவர் எத்தகைய நிவாரணங்களைக் கோரமுடியும்?

அத்தகைய நபருக்கெதிராக பாதிக்கப்பட்டவரால் இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட முடியும்.

குறித்த திருமண வாக்குறுதியானது எழுத்தில் இல்லாவிட்டால் ஏமாற்றப்பட்ட தரப்பானது இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்து நிவாரணம் பெறமுடியாத நிலைமை ஏற்படும்.

## 10. திருமணமான ஒருவரால் திருமணமாகாத ஒருவருக்கு வழங்கப்படும் திருமணவாக்குறுதியின் சட்ட விளைவு எத்தகையது?

திருமணமான ஒருவரால் திருமணமாகாத ஒருவருக்கு வழங்கப்படும் திருமண வாக்குறுதியானது சட்டத்தின் முன் வலிதற்றதாகும். அதே போன்று திருமணமாகாத ஒருவரால் திருமணமான ஒருவருக்கு வழங்கப்பட்ட திருமண வாக்குறுதி சட்டத்தின் முன் வலிதற்றதாகும்.

ஏனெனில், இரு திறத்தவர்களில் ஒருவருக்கு திருமணம் ஒப்பந்தம் செய்வதற்கான தகுதி அல்லது தகைமை காணப்படாமையாகும்.

**11. ஏற்கனவே திருமணம் செய்துள்ள இருவருக்கிடையில் அத்திருமணம் நிலைத்திருக்கும்போது வழங்கப்பட்ட திருமண வாக்குறுதியின் விளைவு எத்தகையது?**

அத்தகைய திருமண வாக்குறுதி சட்டத்தின் முன் வலிதற்றதாகும் ஏனெனில் குறித்த வாக்குறுதியுடன் சம்பந்தப்பட்ட இரு திறத்தவர்களுக்கும் திருமணம் ஒப்பந்தம் செய்வதற்கான தகுதி அல்லது தகைமை காணப்படாமையாகும்.

# அத்தியாயம் - 5.

- **இஸ்லாமிய திருமணம் ( Muslim marriage).**
- **இஸ்லாமிய திருமணத்தின் விளைவுகள் ( Consequences of Muslim Marriage).**
- **இஸ்லாமிய திருமணம் தொடர்பான விவாகரத்து (Divorce relating to Muslim Marriage).**

**1951 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இஸ்லாமிய திருமணம் மற்றும் விவாகரத்து கட்டளைச் சட்டம்**

**Muslim Marriage and Registration Ordinance of No: 13 of 1952.**

## 01. இஸ்லாமிய திருமணம் என்றால் என்ன?

1951 ஆண்டின் 13ம் இலக்க இஸ்லாமிய திருமணம் மற்றும் விவாகரத்து கட்டளைச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் ஒரு இஸ்லாமிய ஆண் மற்றும் ஒரு இஸ்லாமிய பெண் ஆகிய இருவரும் ஒருவருக்கொருவர் சட்டரீதியான வாழ்க்கை துணையாக இணைந்து கொள்வது இஸ்லாமிய் திருமணம். இஸ்லாமிய திருமணம ஒரு வாழ்க்கை ஒப்பந்தமாகவே கருதப்படுதுகின்றது.

## 02. இஸ்லாமிய திருமணம் மற்றும் விவாகரத்து கட்டளைச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வலிதான திருமணம் ஒன்றின் தேவைப்பாடுகள் எவை?

1951 ஆண்டின் 13ம் இலக்க இஸ்லாமிய (முஸ்லிம்) திருமணம் மற்றும் விவாகரத்து கட்டளைச் சட்டமே இலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம்களின் திருமணம் மற்றும் விவாகரத்து விடயங்கள் தொடர்பில் ஏற்பாடு செய்கின்றது.

இஸ்லாமிய (முஸ்லிம்) திருமணம் ஒன்று வலிதானதாக அமைய வேண்டுமாயின் அது பின்வரும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
ஓர் ஆணும் பெண்ணும் (**மணமகன் மற்றும் மணமகள்)** திருமண ஒப்பந்தத்தில் இணைவதன் மூலமே திருமணம் ஒன்று இடம்பெறுகின்றது. ஏனைய ஒப்பந்தங்களை போலவே இங்கும் ஒரு முன்மொழிவும் அதற்கான ஏற்பும் அவசியமானதாகும். அந்த முன்மொழிவானது வலிகாரரினாலும் அந்த முன்மொழிவுக்கான ஏற்பு அல்லது அங்கீகாரம் மணமகனினாலும் செய்யப்படுகின்றது.

இஸ்லாமிய திருமண சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் புத்தி சுவாதீனமுள்ளவரும் பருவமடைந்தவரும் திருமணத்தின் பின்னரான திருமணக்கடமைகளை நிறைவேற்ற தகுதியுடைய ஆட்கள் மணமகன் மற்றும் மணமகளாக இருக்க வேண்டும் என ஏற்பாடு செய்கின்றது.

ஒரு பெண் ஒரே நேரத்தில் ஓர் ஆணுக்கு மாத்திரமே மனைவியாக இருக்க முடியும். ஆனால் ஒரு ஆண் ஒரே நேரத்தில் பல பெண்களுக்கு கணவனாக இருப்பதை இஸ்லாமிய சட்ட ஏற்பாடுகள் அனுமதிக்கின்றது.

## 03. இஸ்லாமிய திருமண சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் திருமணத்திற்கான வயதெல்லை என்ன?

இஸ்லாமிய திருமண சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் திருமணத்திற்கான வயதெல்லை மட்டுப்படுத்தப்படவில்லை ஆனால் இருவரும் பருவமடைந்தோராக இருக்க வேண்டும் என்பது கட்டாய தேவைப்பாடாகும்.

1951ம் ஆண்டின் 13ம் இலக்க இஸ்லாமிய திருமணம் மற்றும் விவாக விவாகரத்து சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் 12 வயதுக்கு குறைந்த பெண் பிள்ளையின் திருமணம் காதியின் அனுமதி இன்றி பதிவுசெய்யப்படமுடியாது.

சாபி இஸ்லாமிய பிரிவை சேர்ந்த பெண் ஒருவரின் திருமணமானது அப்பெண்ணின் வலி திருமண நேரத்தில் அவ்விடத்தில் பிரசன்னமாகியிருந்து அப்பெண்ணின் சம்மதத்தையும் தனது அனுமதியையம் அல்லது சம்மதத்தையும் தெரிவிக்காத பட்சத்தில் அத்திருமணம் ஒரு வலிதான திருமணமாக அமையமாட்டாது.

**04. இஸ்லாமிய சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் திருமணத்திற்கான ஒரு இஸ்லாமிய பெண் தன் சுய விருப்பின் படி மணமகனை தெரிவுசெய்ய முடியுமா?**

ஒரு இஸ்லாமிய பெண் தன் சுய விருப்பின் படி மணமகனை தெரிவு செய்திருந்தால் விவாகத்திற்கு தனது தந்தையின் அல்லது பாதுகாவலரின் அனுமதி பெறப்படவேண்டியது அவசியமாகும்.

தந்தை அல்லது பாதுகாவலர் தமது சம்மதத்தை தெரிவிக்க மறுத்தால் அதற்கான காரணமானது நியாயமானதாக இருக்க வேண்டும். நியாயமற்ற காரணமாக இருப்பின் அப்பெண் காதி நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்து காதியாரின் அனுமதியுடன் திருமணம் செய்யலாம்.

**05. இஸ்லாமிய திருமண சடங்கானது எவ்வாறு அழைக்கப்படுகின்றது?**

இஸ்லாமிய திருமண சடங்கானது நிக்காஹ் **(Nikah Ceremony)** என அழைக்கப்படுகின்றது. புத்தி சுவாதீனமுள்ள பருவமடைந்த இரு ஆண் சாட்சிகளின் முன்னிலையில் அல்லது ஓர் ஆணுடன் இரு பெண் சாட்சிகளின் முன்னிலையில் நிக்காஹ் **(Nikah)** நடைபெற வேண்டும். ‘‘திருமணம் செய்து வைத்தேன்’’ என வலிகாரரால் பிரகடனம் செய்யப்படுதல் மற்றும் ‘‘அதை ஒப்புக்கொண்டேன்’’ என மணமகனால் வெளிப்படுத்தப்படுதல் தொடர்பான நிகழ்வுகள் இச்சாட்சிகளின் முன்னிலையில் நடைபெறவேண்டும்.

**06. இஸ்லாமிய திருமணம் தொடர்பில் விவாக பதிவு கட்டாயமானதா?**

1951ம் ஆண்டின் 13ம் இலக்க இஸ்லாமிய திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம் விவாக பதிவு கட்டாயமானது என ஏற்பாடு செய்கின்றது.

இஸ்லாமிய திருமணப் பதிவதென்பது நிக்காஹ் ஒன்று **(Nikah)** பின்வருவோரின் அதாவது மணமகன், மணமகளின் வலி, இரண்டு சாட்சிகள், நிக்காஹ்வை நடத்துபவர் மற்றும் பதிவாளர் ஆகியோரின் ஒருமித்த சமூகத்தில் அல்லது பிரசன்னத்தில் நடைபெறும் நிக்காஹ்வை முஸ்லிம் விவாக பதிவு புத்தகம் ஒன்றில் பதிவதாகும்.

**07. இஸ்லாமிய திருமண சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் திருமணம் செய்யும் தகைமை அற்றவர்களாக உள்ள தடுக்கப்பட்ட உறவு முறைகளைக் (Prohibited degrees of relationship) கொண்டவர்கள் யார்?**

- மணமகனும் - அவரின் தாய்மார்களும்
- மணமகனும் - அவரின் மகள்மாரும்.
- மணமகனும் - அவரின் சகோதரிகளும் பால்குடி சகோதரிகளும் மணமகனின் தந்தையின் மனைவிக்கு பிறந்தோரும் மற்றும் மணமகனின் தாயின் சகோதரிகளும்
- மணமகனும் - அவரின் தந்தையின் சகோதரிகளும்
- மணமகனும் - அவரின் தாயின் சகோதரிகளும்
- மணமகனும் - அவரின் சகோதரனின் புதல்வியரும்
- மணமகனும் - அவரின் சகோதரியின் புதல்வியரும்
- மணமகனும் - மணமகனுக்கு பாலூட்டிய தாய்மார்களும்
- மணமகனும் - அவரின் பால்குடிச்சகோதரிகளும் மற்றும் மணமகனின் மனைவியரின் தாய்மார்களும்.
- மணமகன் ஒரு பெண்ணை விவாகம் செய்து அவளுடன் நீங்கள் சேர்ந்து திருமண வாழ்க்கை வாழ்ந்து வரும்போது அவளுடைய முந்திய கணவனுக்கு பிறந்ததும் மணமகனின்

கண்காணிப்பில் இருக்கும் மகளை திருமணம் செய்ய கூடாது (ஆனால் மணமகன் ஒரு பெண்ணை மணந்த பின்னர் அவளுடன் சேர்ந்து திருமண வாழ்க்கை வாழ்ந்துவராத நிலையிலிருக்கும் போது அவளுடைய முந்திய கணவனுக்கு பிறந்த பெண்ணை திருமணம் செய்யலாம்).

- மணமகனும் - அவரின் மகன்மாரின் மனைவியர்.
- மணமகனும் - இரண்டு சகோதரிகளையும் ஒரே நேரத்தில் மனைவியராக ஒன்று சேர்ப்பது விலக்கப்பட்டுள்ளது.

## 08. இஸ்லாமிய திருமண சட்ட ஏற்பாடுகள் பலதார மணம் (Polygamy) எனும் விடயத்தை அங்கீகரிக்கின்றதா?

ஒரு இஸ்லாமிய (முஸ்லிம்) ஆண் ஒரே காலப்பகுதியில் அதாவது சமகாலத்தில் நான்கு பெண்களை திருமணம் செய்வதை இலங்கையில் நடைமுறையில் உள்ள சட்டம் அனுமதிக்கின்றது. ஆனால் தன் மனைவியருக்கிடையில் நேர்மையாகவும் நீதியாகவும் நடக்க வேண்டும் எனும் கட்டாய கடமை இவ்வாணின் மீது சுமத்தப்பட்டுள்ளது. **(பிரிவு – 24)**

ஒரே காலப்பகுதியில் அதாவது சமகாலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை திருமணம் செய்யும் ஒருவர் பின்வரும் நடபடிமுறைகளை பின்பற்றல் வேண்டும்.

தனது மறுதிருமணம் பற்றிய அறிவித்தலை:

- தனது பிரதேச காதி
- முதல் மனைவி அல்லது மனைவியர் வாழும் பிரதேச காதி திருமணம் செய்யப்போகும் மனைவி வாழும் பிரதேச காதி ஆகியோருக்கு 30 நாட்களுக்கு முன் கொடுக்க வேண்டும்.
- காதி அறிவித்தலை ஜும்ஆ பள்ளிகள் மற்றும் பிரபல்யமான இடங்களில் ஒட்டுதல் வேண்டும்.
- காதியின் அங்கீகாரம் வழங்கப்பட்ட சான்றிதழ் பெறப்படல் வேண்டும் பெற்ற பின்னரே திருமணம் செய்ய முடியும்.

## 09. இஸ்லாமிய திருமண சட்ட ஏற்பாடுகள் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஏனைய மட்டுப்பாடுகள் (Other Limitations) எவை?.

ஒரு இஸ்லாமிய (முஸ்லிம்) பெண் ஒரே நேரத்தில் ஒரு ஆணுக்கு மாத்திரமே மனைவியாக இருக்க முடியும்.

ஒரு இஸ்லாமிய (முஸ்லிம்) பெண் முஸ்லிம் அல்லாத ஒருவரை திருமணம் செய்யின் அவ்விவாகம் வெற்றானதாகும். ஆனால் சில சந்தர்ப்பங்களில் இவ்விவாகம் பொது விவாக சட்டத்தின் கீழ் வலிதானதாக கருதப்படலாம்.

ஒரு இஸ்லாமிய (முஸ்லிம்) ஆண் இந்து அல்லது கிறிஸ்தவ பெண்ணை முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்ட ஏற்பாடுகளை பின்பற்றி திருமணம் செய்யின், அது முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டத்திற்குட்பட்ட திருமணமாக

## 10. இஸ்லாமிய சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் திருமணம் செய்வதற்கு பொறுத்தமற்றதாகக் கருதப்படும் காலப்பகுதிகள் எவை?

கணவனின் மரணத்தின் பின்னரான மற்றும் தலாக்கின் பின்னரான இத்தாஹ் காலத்தில் ஒரு பெண் மறுவிவாகம் செய்வது தடுக்கப்பட்டுள்ளது.

மக்காவில் புனித யாத்திரையை நிறைவேற்றும் நோக்குடன் இஹ்றாம் அணிந்திருக்கும் ஒருவர் விவாகம் செய்வது தடுக்கப்பட்டுள்ளது.

## 11. வலிதான இஸ்லாமிய திருமணம் ஒன்றின் விளைவுகள்:

இஸ்லாமிய சட்டத்தின் பிரகாரம் ஒரு கணவன் தன் மனைவியின் பாதுகாப்பு பராமரிப்பு என்பவற்றிற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

உணவு உடை வதிவிடம் ஏனைய அடிப்படைத் தேவைகள் அனைத்தையும் தனது வருமானத்திற்கு ஏற்ற அடிப்படையில் வழங்க வேண்டும்.

மனைவிக்கு அவளின் தகுதிக்கேற்றதான மஹரை செலுத்துவதோடு மனைவியின் பெற்றோரால் வழங்கப்பட்ட சொத்துக்களையும் நம்பிக்கையாக பாதுகாக்க வேண்டியது கணவனின் கடமையாகும்.

இதே போன்று மனைவியும் கணவனுக்கு உண்மையானவளாகவும் அவனது பிள்ளைகளையும் சொத்துக்களையும் சிறந்த முறையில் கண்காணிப்பதோடு கணவனின் தேவைகளையும் பூர்த்தி செய்து கொடுப்பவளாக மனைவி இருக்க வேண்டும்.

நியாயமான காரணமின்றி தன்னோடு வாழ மறுக்கும் பெண்ணுக்கு அல்லது தகாத நடத்தைகளை உடையவளுக்கு தாபரிப்பு செலவு வழங்க வேண்டிய அவசியம் கணவனுக்கு இல்லை.

தனது சட்டரீதியான அல்லது சட்ட ரீதியற்ற பிள்ளைகளுக்கான தாபரிப்பு செலவுக்கு தந்தையே பொறுப்பாவார்.

பெண் பிள்ளைகளாயின் திருமணமாகும்வரையில் தந்தை அவர்களை பராமரிக்க வேண்டும்.

ஆண் பிள்ளைகளாயின் பருவவயதை அடையும்வரையில் தந்தை அவர்களை பராமரிக்க வேண்டும்.

பிள்ளைகளுக்கு தனிச்சொத்து இருப்பின் அவர்களின் சொத்தில் இருந்து கொடுக்க வேண்டும். ஆண்பிள்ளைகள் பருவம் வந்த பின்னரும் உழைக்க முடியாத அளவுக்கு ஊனமுற்றிருப்பின் அவர்களை பராமரிக்க வேண்டியது தந்தையின் கடமையாகும்.

திருமணமாகிய மகள் விதவையாகி வறிய நிலையில் வாழ்ந்துவந்தால் அவளை பராமரிக்க வேண்டியது தந்தையின் கடமையாகும்.

## 12. இஸ்லாமிய திருமண சட்ட ஏற்பாடுகள் சொத்துக்கள் தொடர்பில் எத்தகைய ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது?

இஸ்லாமிய திருமணம் ஒன்று கணவன் மனைவியின் சொத்துக்களிலோ ஏனைய சிவில் உரிமைகளிலோ எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது.

மனைவி தனது பெயரில் உள்ள சொத்துக்கள் தொடர்பில் தனது விருப்பில் ஒப்பந்தங்களையோ ஏனைய நடவடிக்கைகளையோ மேற்கொள்வதில் எந்த தடையும் இருக்கமாடடாது.

எனவே இஸ்லாமிய மனைவி, ஆதனம் தொடர்பான வழக்கு நடவடிக்கைகள் எதிலும் தனது கணவனை ஒரு திறத்தவராக சேர்த்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

தனது சொத்துக்கள் தொடர்பில் இஸ்லாமிய மனைவிக்கு பூரண சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

## 13. இஸ்லாமிய திருமண சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் விவாகரத்துக் கோரும் ஒருவர் எத்தகைய நடபடிமுறைகளை பின்பற்றல் வேண்டும்?

திருமண வாழ்கையானது இருதரப்பினருக்கும் இடையில் ஏற்படும் முரண்பாடுகள் காரணமாக விவாகரத்துக்கு வழிவகுக்கின்றது.

கணவன் விவாகரத்துக் கோரும்போது பின்வரும் நடபடிமுறைகளைப் பின்பற்றல் வேண்டும்:

கணவனினால் கோரப்படும் விவாகரத்து – தலாக் என அழைக்கப்படுகின்றது.

கணவனால் விவாகரத்துக் கோரப்படும் போது பின்பற்றப்படவேண்டிய நடபடிமுறைகள் பற்றி இஸ்லாமிய திருமணம் (முஸ்லிம்) மற்றும் விவாகரத்து சட்டத்தின் அட்டவணை 2 இல் எடுத்துக்கூறப்படடுள்ளது.

கணவன் மனைவி வாழும் இடப்பரப்புக்கு பொறுப்பான காதிக்கு விண்ணப்பம் செய்தல் வேண்டும்.

காதி அவ்விண்ணப்பம் பற்றிய அறிவித்தலை மனைவிக்கு அறியக்கொடுத்தல் வேண்டும்.

காதி கணவன் மற்றும் மனைவி இருவரையும் அழைத்து தன்னால் இயலுமான வரை சமரசத்திற்கு முயற்சி செய்தல் வேண்டும்.

இம்முயற்சி கையளிக்காதவிடத்து விவாகரத்திற்கான அறிவித்தல் கொடுக்கப்பட்ட 30 நாட்களின் பின் 02 சாட்சிகளின் முன்னிலையில் தலாக் சொல்லப்பட வேண்டும்.

மனைவி சமூகமளிக்கவில்லையாயின் மனைவிக்கு காதி இது பற்றிய அறிவித்தலைக் கொடுத்தல் வேண்டும்.

இக்குறித்த நாளிலிருந்து இன்னுமொரு 30 நாட்கள் சமரசத்திற்காக வழங்கப்படும். அப்பொழுதும் சமரசம் ஏற்படவில்லையெனில் இரண்டாம் முறையாக தலாக் கூறுப்படுதல் வேண்டும்.

இரண்டாம் முறையாக தலாக் கூறப்பட்ட பின்னர் இக்குறித்த நாளிலிருந்து இன்னுமொரு 30 நாட்கள் சமரசத்திற்காக வழங்கப்படும்.

அப்பொழுதும் சமரசம் ஏற்படவில்லை எனின் மூன்றாம் முறை தலாக் கூறப்பட்டு அது காதியினால் பதிவு செய்யப்படும்.

மனைவி இலங்கையில் இல்லையாயின் மனைவியின் நெருங்கிய உறவினருக்கு காதி இது பற்றிய அறிவித்தலைக் கொடுத்தல் வேண்டும்.

மனைவியின் நெருங்கிய உறவினருக்கு அவ்வாறு அறிவித்தலைக் கொடுக்கமுடியாத சூழ்நிலை காணப்படுமாயின், அவ்வறிவித்தலைக் கொடுக்காமல் இருப்பதற்கும் காதிக்கு தற்றுணிவுண்டு.

## 14. மனைவியால் விவாகரத்து கோரப்படும்போது எத்தகைய நடபடிமுறைகளை பின்பற்றல் வேண்டும்?

மனைவியால் விவாகரத்து கோரப்படும் போது எத்தகைய நடபடிமுறைகளை பின்பற்றல் வேண்டும் என்பது 1951ம் ஆண்டின் 13ம் இலக்க இஸ்லாமிய திருமணம் மற்றும் விவாக விவாகரத்து சட்டத்தின் அட்டவணை 3ல் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

மனைவி கணவன் வாழும் இடப்பரப்புக்கு பொறுப்பான காதிக்கு விண்ணப்பம் செய்தல் வேண்டும்

காதி அவ்விண்ணப்பம் பற்றிய அறிவித்தலை கணவனுக்கு அறியக்கொடுத்தல் வேண்டும்.

மனைவியால் பின்வரும் அடிப்படைகளில் விவாகரத்து கோரப்படலாம்:

- மனைவிக்கு பராமரிப்பு வழங்க மறுத்தல்
- நீண்ட காலமாக மனைவியை விட்டு பிரிந்து சென்று வாழ்தல்.
- கணவன் இன்னொருவரின் மனைவியுடன் சோரம் போதல்.
- மானசீகமாக துன்புறுத்தல் மற்றும் உடலளவிலான துன்புறுத்தல்.
- கணவன் ஆண்மையற்றவனாக இருத்தல்.
- சித்தசுவாதீனமற்றவனாக இருத்தல்.

## 15. இஸ்லாமிய திருமண சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எத்தகைய முறைகளில் விவாகரத்துக்கள் கோரப்படலாம்?

இஸ்லாமிய திருமண சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பின்வரும் முறைகளில் விவாகரத்துக்கள் கோரப்படலாம்:

### 1. பஸஹ்

இது மனைவி மீது எந்தவொரு குற்றமும் இல்லாத நிலையில் மனைவியால் கோரப்படும் விவாகரத்தாகும். இங்கு கணவனின் சம்மதம் கிடைக்கவில்லை எனினும் கணவனின் மீது நியாயமான குற்றச்சாட்டு காணப்படின் மனைவியால் விவாகரத்து பெறமுடியும்.

### 2. குல்உ

இது கணவன் மனைவி இருவரின் சம்மதத்துடனும் மனைவியால் கோரப்படும் விவாகரத்தாகும். இங்கு மனைவி தனக்கு கணவன் கொடுக்க வேண்டிய மஹரை விட்டுக்கொடுப்பதன் மூலமோ அல்லது ஒரு தொகைப்பணத்தை கொடுத்தோ விவாகரத்து பெற்றுக்கொள்ளலாம்.

### 3. லிஆன்

இது கணவன் தன் மனைவி பெற்றெடுத்த குழந்தையின் நெறிமுறை பற்றி சந்தேகம் கொள்ளும் போது அதாவது தனது மனைவி இன்னுமொரு ஆணுடன் சோரம் போனாள் எனும் குற்றச்சாட்டை மனைவி மீது சுமத்துவதாகும். இக் குற்றச்சாட்டை கணவன் 4 சாட்சிகளை கொண்டு நிரூபிக்க வேண்டும். மனைவி மீதான குற்றச்சாட்டு எண்பிக்கப்படின் அவ்வேளை கணவன் விரும்பின் அவளை விவாகரத்து செய்யலாம்.

**4. முபாறத்**

கணவன் மனைவி இருவரும் பரஸ்பர சம்மதத்துடன் கோரும் விவாகரத்து – முபாறத் என அழைக்கப்படும். இங்கு கணவன் மனைவி இருவரும் தமது திருமண ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதாகும். இங்கு கணவனால் மனைவிக்கு எந்த தொகைப்பணமும் செலுத்தப்பட்ட தேவையில்லை.

## 11. இஸ்லாமிய திருமணம் தொடர்பான விவாகரத்தின் விளைவுகள் என்ன?

**1. இத்தாஹ்**

கணவனால் மனைவி விவாகரத்து செய்யப்பட்டாலோ அல்லது கணவன் இறந்து விட்டாலோ மனைவி இத்தாஹ் இருப்பது அவளின் மீது கடமையாகும். விவாகரத்து செய்யப்பட்ட மனைவி 3 மாதங்கள் இத்தாஹ் இருக்க வேண்டும்.

அவள் ஒரு கர்ப்பிணிப் பெண்ணாக இருப்பின் அக்குழந்தையை பெற்றெடுக்கும் வரை இத்தாஹ் இருப்பது அப்பெண்ணின் மீது சுமத்தப்பட்டுள்ள கடப்பாடாகும். இக்காலப்பகுதியில் மனைவிக்கான செலவினங்கள் கணவனினால் வழங்கப்பட வேண்டும்.

இக்காலப்பகுதியில் மறுமணம் ஒன்றை புரிவதோ இதற்கு துணையாக இருப்பதோ உதவி புரிவதோ தண்டனைக்குரிய குற்றமாகும். இவளின் முன்னைய கணவன் எனினும் அக்காலப்பகுதி முடியும் வரையில் திருமணம் செய்வது குற்றமாகும். **(பிரிவு – 87)**

ஒரு ஆண் தனது மனைவியை தலாக் கூறியிருப்பின், பின்பு அதே பெண்ணை மறுமணம் செய்ய விரும்பினால் பின்வரும் விடயங்கள்

பூர்த்தி செய்யப்படல் வேண்டும் என தீரப்புச் சட்டங்கள் எடுத்துரைக்கினறன.

- அவள் இத்தாவை நிறைவேற்றி இருக்க வேண்டும்.
- அவள் இரண்டாம் முறை இன்னொரு ஆணை திருமணம் செய்திருக்க வேண்டும்.
- அவள் அக்கணவனுடன் தாம்பத்தியமாக வாழ்ந்திருத்தல் வேண்டும்.
- இவர்களுக்கிடையிலான விவாக ஒப்பந்தம் சட்டரீதியாக முடிவுக்கு கொண்டுவரப்பட்டிருத்தல்
- இரண்டாம் முறையாக அவள் இத்தாவை நிறைவேற்றி இருக்க வேண்டும்.

16. **இஸ்லாமிய திருமணம் மற்றும் விவாகரத்து கட்டளைச் சட்ட ஏற்பாடுகளின் காணப்படும் ஏனைய முக்கியமான விடயங்கள் யாவை?**

பின்வரும் விடயங்களை ஏனைய முக்கியமான விடயங்களாகக் குறிப்பிடலாம்:

**1.மஹர், 2.கைக்கூலி, 3. பிள்ளைகளின் பாதுகாப்புரிமை**

**மஹர்:**

ஒரு கணவன் விவாகத்தின் போது தன் மனைவிக்கு கொடுக்கும் அன்பளிப்பு மஹர் எனப்படும். இது கட்டாய கடமையாக இருந்தாலும் மஹர் கொடுக்கப்படவில்லை என்பதற்காக அத்திருமணம் வலிதற்றதாக மாறிவிடாது. மஹர் ஏற்கனவே கூறப்பட்டவாறு திருமணத்தின் போது கொடுக்கப்படவில்லை என்றாலும் அத்திருமணம் விவாகரத்தில் முடிவடையின் அப்போது அம்மஹரை கோரும் உரிமை மனைவிக்கு உண்டு. (பிரிவு 47(1)(a). இக்கோரிக்கை திருமணம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு மூன்று வருடங்களுக்குள் மனைவியினால் கோரப்படலாம். மூன்று வருடங்களுக்கு பின்பு அதை கோர முடியாது என்று பிரிவு 39 கூறுகின்றது.

**கைக்கூலி:**

கைக்கூலி என்பது மணமகளின் பாவனைக்காக மணமகளின் உறவினரால் மணமகனுக்கு திருமணத்தின் போது அல்லது அதன் பின்னர் கொடுக்கப்படும் அசையும் அசையா ஆதனங்கள் மற்றும் பணம் என்பன இதில் அடங்கும். இஸ்லாமிய சட்டத்திற்கு இது முரணானதாயினும் வழக்காற்று வழியாக இது கட்டாயமாக்கப்பட்டு விவாகப்பதிவிலும் இடம்பிடித்து கொண்டது. திருமணப்பதிவில் கைக்கூலிக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் கைக்கூலியை தெளிவாக குறிப்பிட வேண்டும். திருமணமொன்று முடிவுக்கு கொண்டு வரப்படும் போது கைக்கூலியாக வழங்கப்பட்ட தொகையை காதி நீதிமன்றத்திற்கு விண்ணப்பிப்பதன் மூலம் மீளப்பெறலாம். ஆனால் அசைவற்ற ஆதனங்களை மீளப்பெற மாவட்ட நீதிமன்றத்திற்கே விண்ணப்பிக்க வேண்டும். **பிரிவு 47 (1) (F).**

## அத்தியாயம் - 6.

- **கண்டிய திருமணம (Kandyan Marriage ).**
- **கண்டிய திருமண வகைகள் ( Category of Kandyan Marriages).**
- **கண்டிய திருமணத்தின் விளைவுகள் ( Consequences of Kandyan Marriage).**
- **கண்டிய திருமணம் தொடர்பான விவாகரத்து (Divorce relating to Kandyan Marriage).**

### 1952 ஆண்டின் 44 ஆம் இலக்க கண்டிய திருமணம் மற்றும் விவாகரத்துக் கட்டளைச் சட்டம்

**Kandiyan Muslin Marriage and Divorce Ordinance of No: 44 of 1952.**

**01. கண்டியச் சட்டம் யாருக்கு ஏற்புடையது?**

கண்டிய சிங்கள மக்களுக்கு ஏற்புடையதான சட்டமாகும்.

**02. கண்டிய விவாகம் மற்றும் விவாகரத்து விடயங்கள் தொடர்பான முதன்மைச் சட்டம் எது?**

1952ம் ஆண்டின் 44ஆம் இலக்க கண்டிய விவாகம் மற்றும் விவாகரத்துச் சட்டமே இவ்விடயம் தொடர்பான முதன்மைச்சட்டமாகும். இது கண்டிய பிரதேசங்களில் வாழ்பவர்களுக்கு மட்டுமே உரித்துடையதாகும்.

**03. கண்டிய சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் காணப்படும் திருமண வகைகள் எவை?**

கண்டியச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் ‘தீக’ மற்றும் ‘பின்ன’ ஆகிய இரு வகையான திருமணங்கள் காணப்படுகின்றன. கண்டியச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் திருமணத்தை பதிவு செய்யும் பொழுது அது தீக திருமணமா அல்லது பின்ன திருமணமா என்பது தெளிவாக குறிப்பிடப்பட்டு பதிவு செய்யப்படல் வேண்டும்

**04. கண்டிய சட்ட ஏற்பாடுகளில் காணப்படும் ‘தீக’ திருமண முறை எத்தகையது?**

தீக திருமண முறையில் கணவன் தனது மனைவியை தனது வீட்டிற்கு அழைத்துச் செல்வார். கணவனின் வீடானது திருமண இல்லமாக கொள்ளப்படும்.

குறித்த திருமணத்தின் பிரகாரம் மனைவியால் திருமணத்தின் பொருட்டு கொண்டுவரப்பட்ட சீதனம் தொடர்பிலோ அல்லது திருமணத்தின் பின்பு அவளால் உழைத்துச் சேகரிக்கப்பட்ட ஆதனம் தொடர்பிலோ கணவனுக்கு எந்தவிதமான உரித்தும் இல்லை.

கணவன் இறந்துவிட்டால் குடும்ப அங்கத்தவர்களின் நலன், மற்றும் பராமரிப்பு தொடர்பில் கணவனுடைய சொத்தை அனுபவித்து அதனை நிர்வாகம் செய்வதற்கான உரித்தும் உரிமையும் மனைவிக்கு உண்டு.

**05. ‘பின்ன’ திருமண முறை எத்தகையது?**

பின்ன திருமணம் தொடர்பான சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் கணவன் மனைவியின் வீட்டில் வசிப்பார். சாதாரண

பொதுமக்களுடைய கருத்துப்படி மனைவியின் வீட்டில் எந்தவிதமான விசேட சலுகைகளும் கிடையாது.

பின்ன திருமண முறையின் பிரகாரம் திருமணம் இடம்பெறும் பொழுது கணவன் பனையோலை ஒன்றை தனக்கு அருகாமையில் வைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறாக பனையோலையை வைத்திருப்பதன் அர்த்தம் என்னவெனில் எந்த சந்தர்ப்பத்திலும் மனைவி அல்லது அவளது பெற்றோர் கணவனை வீட்டிலிருந்து வெளியேறுமாறு கட்டளையிட முடியும் என்பதாகும்.

**06. கண்டிய சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எத்தகைய காரணங்களை அடிப்படையாகக் கொண்டு விவாகரத்து பெற்றுக்கொள்ளலாம்?**

- திருமணத்தின் பின்னர் இடம்பெறும் மனைவியின் சோரம்
- கடுமையானதும் கொடுமையானதுமான செயற்பாடு மற்றும் கணவனின் தகாத நடத்தைகள்
- கணவன் அல்லது மனைவி மறு வாழ்க்கைத்துணையை தொடர்ச்சியாக இரு வருடங்களுக்கு கைவிட்டுச் சென்று வாழுதல்
- தொடர்ந்து திருமண வாழ்க்கையை சந்தோசமாகவும் ஒன்றாகவும் சேர்ந்து வாழமுடியாத நிலை
- திருமணத்தின் இரு திறத்தவர்களிடையே பரஸ்பர சம்மதத்தின் பேரில் பெற்றுக் கொள்ளமுடியும்.

**07. கண்டியச் சட்டத்தின் கீழ் விவாகரத்து கோரி விண்ணப்பம் எங்கே முன்வைக்கப்பட வேண்டும்?**

குறித்த திறத்தவர் நிரந்தரமாக வாழ்ந்து வருகின்ற பிரதேச பதிவாளரிடமே அத்தகைய விண்ணப்பத்தை செய்தல் வேண்டும்.

**08. கண்டிய திருமணம் ஒன்று வலிதற்றாகக் கருதப்படக்கூடிய சந்தர்ப்பங்கள் எவை?**

கண்டிய திருமண விவாகரத்துச் சட்டத்தில் பின்வரும் ஏற்பாடுகள் காணப்படுகின்றன.

பிரிவு 4 - திருமணத்திற்கென நிர்ணயிக்கப்பட்ட வயதெல்லையை விட குறைவான வயதுடையவர்களாக எவரேனும் திருமண திறத்தவர்கள் இருத்தல்

பிரிவு 5 - திருமண திறத்தவர்களிடையே காணப்படும் உறவு முறையானது தடுக்கப்பட்ட உறவுமுறைக்குள் ஒன்றாக இருப்பின்

பிரிவு 6 - முதலாவது திருமணம் நிலைத்திருக்கையில் இரண்டாவது திருமணம் ஒன்றை மேற்கொண்டிருத்தல்.

## அத்தியாயம் - 7.

## தீர்பபுச் சட்டங்கள்.

### 1. Athanayaka Vs Athanayaka - 16 C.L.R 206

இந்த வழக்கில் மனைவி தனது கணவரிடமிருந்து விவாகரத்து கோரி வழக்கொன்றை தாக்கல் செய்தார். கணவனுக்கும் மனைவிக்குமிடையில் தொடர்ச்சியாக ஏற்பட்டு வந்த சண்டை சச்சரவினை தொடர்ந்து எதிராளியான கணவன் தனது மனைவியை அவளுடைய தாயாரின் வீட்டிற்கு அழைத்துச் சென்று அவளை அங்கேயே விட்டு விட்டு வந்தான். அதன் பின்னர் எதிராளியான கணவன் தனது மனைவியின் தாயாருக்கு கடிதம் ஒன்றை எழுதியிருந்தான். அதில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தான். 'உனது மகள் சோர வாழ்க்கை வாழ்ந்து வருகின்றாள் எனவே அவள் எனக்குத் தேவையில்லை'

மேற்குறித்த வாசகத்தை கவனத்திற்கெடுத்த நீதிமன்றம் எதிராளியான கணவனுக்கு திருமண உறவை அறுப்பது தொடர்பான வன்மமான எண்ணம் இருந்துள்ளதென்று குறிப்பிட்டு கணவனது வன்ம உறவறுத்தல் எனும் காரணத்தின் அடிப்படையில் மனைவியின் கோரிக்கையை ஏற்று மனைவிக்கு விவாகரத்தை அனுமதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

## 2. Sellappa Vs Kumarasamy - 1 C.W.R 104

இவ்வழக்கில் மணமகன் திருமணம் செய்வதற்கான அறிவித்தலை முறைப்படி கொடுத்திருந்தார். ஆனால் திருமணமானது இந்து திருமண வழக்காற்று சம்பிரதாயங்களின் படி நடைபெற்றிருந்தது. திருமணப்பதிவாளர் குறித்த திருமணத்தை பதிவு செய்வதற்காக அங்கு சமூகமளித்திருந்தார்.

திருமணம் தொடர்பான வழக்காற்று சம்பிரதாயங்கள் முடிவடைந்த பின்பு மணமகனுடைய தந்தைக்கும் மணமகளுடைய தந்தைக்கும் இடையில் சீதன விடயம் தொடர்பான சச்சரவு ஏற்பட்டது. அதன் பின்பு திருமணப்பதிவு இடம்பெறாமலேயே மணமகன் வீட்டை விட்டு வெளியேறினான்.

குறித்த சம்பவம் நடைபெற்றதிலிருந்து ஒரு மாதகாலத்திற்கு பின்பு குறித்த மணமகனும் மணமகளும் கணவன் மனைவியாக சேர்ந்து வாழ்க்கை நடாத்தத் தொடங்கினர்.

இங்கு குறித்த திருமணத்தின் செல்லுபடியான தன்மை பற்றி கேள்வி எழுந்த போது நீதிமன்றம், திருமணப்பதிவு இடம்பெறாத சம்பவமானது திருமண தினத்தன்று நடைபெற்ற இந்து வழக்காற்று திருமணத்தின் செல்லுபடியான தன்மையை எவ்வகையிலும் பாதிக்காது எனக் கூறியதுடன் அங்கு வலிதான திருமணமொன்று இடம்பெற்றுள்ளது எனவும் தீர்ப்பளித்தது.

## 3. Missi Nona Vs Aronlis - 17 N.L.R 425.

இவ்வழக்கின் சாட்சியங்களின் பிரகாரம் எதிராளி வழக்காளியை திருமணம் செய்வதற்கான திருமண அறிவித்தலை பதிவாளருக்கு கையளித்திருந்தார். குறித்த திருமண அறிவித்தலானது நியதிச் சட்ட ஏற்பாடுகளை பூர்த்தி செய்வதான திருமண வாக்குறுதி ஒன்றாக கருதப்படமுடியாது என நீதிமன்றம் கூறியது. மேற்குறித்த காரணத்தின் அடிப்படையில் வழக்காளியின் இழப்பீட்டு கோரிக்கை வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

## 4. Sobihamini Vs Abuhami - 23 N.L.R 353.

இவ்வழக்கில் முன்வைக்கப்பட்ட சாட்சிகளின் பிரகாரம் திருமண தினத்தன்று போருவ சடங்கு நடைபெற்றுள்ளது. திருமண திறத்தவர்களின் உறவினர்களின் முன்னிலையில் மணமகன், மணமகள் ஆகிய இருவருடைய விரல்கள் கட்டப்பட்டு அவ்விரல்கள் மீது நீர் ஊற்றப்பட்டு

திருமணச் சடங்கு நிறைவேற்றப்பட்டது. அதன் பின்பு அவர்கள் இருவரும் கணவன் மனைவியாக வாழ்ந்து வந்தார்கள்.

இங்கு முறையான வழக்காற்று சம்பிரதாயங்கள் பின்பற்றப்பட்டு வலிதான திருமணமொன்று நடைபெற்றுள்ளது என தீர்ப்பளிக்ககப்பட்டது.

## 5. Abilinu Hamine Vs Appuhamy - 21 N.L.R 442

இவ்வழக்கின் எதிராளியால் திருமணப் பதிவாளருக்கு கொடுக்கப்பட்ட திருமண அறிவித்தலின் அடிப்படையில் இழப்பீட்டுக் கோரிக்கையை முன்வைத்து எதிராளிக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் மற்றும் அக்கடிதத்திற்கு எதிராளியின் சட்டத்தரணியால் அனுப்பி வைக்கப்பட்ட பதில் கடிதம் என்பவற்றின் உள்ளடக்கம் ஓர் எழுத்து மூலமான திருமண வாக்குறுதி ஒன்றை உருவாக்கியிருக்கவில்லை என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

## 6. Ratnamma Vs Rasaiah - 48 N.L.R 475.

இவ்வழக்கில் முன்வைக்கப்பட்ட சாட்சியங்களின் பிரகாரம் தாலிக்குப் பதிலாக மஞ்சள் கயிறு கழுத்தில் கட்டப்பட்டு திருமணம் நடைபெற்றுள்ளது. தாலிக்குப் பதிலாக மஞ்சள் கயிறை கட்டுதல் திருமணம் ஒன்று நடைபெறுவதற்கு போதுமானது எனவும் அங்கு திருமணம் ஒன்று நடைபெறுகின்ற எண்ணம் இருப்பது முக்கியத்துவம் பெறுகின்றது என்றும் எனவே இங்கு வலிதான திருமணம் ஒன்று இடம்பெற்றிருக்கின்றது எனவும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

## 7. Kanthiah Vs Thangamani - 55 N.L.R 568

இவ்வழக்கில் ஏற்கனவே திருமணமொன்றை செய்து கொண்ட ஒருவர் அத்திருமணம் தொடர்பான விவாகரத்து வழக்கில் முற்றான தீர்வை பதியப்படுவதற்கு முன்பதாக இன்னொரு பெண்ணுடன் வழக்காற்றுத் திருமணம் ஒன்றை செய்து திருமண வாழ்க்கையை வாழ்ந்து வந்தார்.

இங்கு முற்றான தீர்வை பதியப்படாத சூழ்நிலையில் குறித்த நபரது முதலாவது திருமணம் முறையாக முடிவுறுத்தப்படாத காரணத்தினால் அவரால் செய்து கொள்ளப்பட்ட இரண்டாவது திருமணம் வலிதற்றது என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

## 14. Fernado Vs Jochim - 30 N.L.R 224

தேவாலய நிச்சயதார்த்த பதிவுப்புத்தகத்தில் (Betrothal Register) அதாவது தேவாலய மதகுருவின் முன்னிலையில் நிச்சயதார்த்த பதிவேட்டில் கையொப்பம் இடுதலானது வலிதான திருமண வாக்குறுதி ஒன்றை உருவாக்குகின்றது என்றும் எனவே அதனடிப்படையில் திருமண வாக்குறுதி ஒன்று மீறப்பட்டுள்ளது என்பதற்கான நட்டஈட்டை பாதிக்கப்பட்டவர் பெற்றுக்கொள்ள முடியும் என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இவ்வழக்கில் நீதிமன்றமானது தனது தீர்ப்பில் எடுத்துக் கூறுகையில் 'நிச்சயதார்த்தம்' (Betrothal) எனும் பதமானது தன்னளவில் திருமண வாக்குறுதி என்ற பொருளை தருகின்றது எனவும் கூறியுள்ளது.

## 8. De Mel Vs De Mel - 54 N.L.R 91

இவ்வழக்கில் கணவன், தனது மனைவி சோர வாழ்க்கையில் வாழ்ந்து வருகின்றாள் என சந்தேகப்பட்டு தனது வீட்டிலிருந்து வெளியேறும் படி மனைவிக்கு கட்டளையிட்டதுடன், அவளது சோர வாழ்க்கை குற்றத்தை ஏற்று மனைவி மன்னிப்புக் கோர வேண்டுமென்றான். அவ்வாறு செய்யும் வரை தனது மனைவியுடன் மீண்டும் திருமண உறவை ஆரம்பிக்க முடியாது எனக் கூறினான்.

கணவனால் மனைவி மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு நியாயமற்றதென்றும் அவர் வன்மரீதியான திருமணக்குற்றத்தை புரிந்துள்ளார் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

## 9. Vijayakunarathan Vs Catharine - 55 N.L.R 569

திருமணமொன்றை செய்யும் போது பொதுத்திருமணக் கட்டளைச்சட்டத்தின் கீழ் உள்ள சட்ட ஏற்பாடுகளை நன்கு தெரிந்து கொண்டு வேண்டுமென்றே அவற்றை அலட்சியம் செய்து இருப்பின் அத்திருமணமானது வெற்றான திருமணமாக கருதப்படும். ஆயினும் அத்திருமணமானது வழக்காற்றுச் சம்பிரதாயங்கள் மற்றும் சடங்குகள் என்பவை கடைப்பிடிக்கப்பட்டு நடைபெற்றிருந்தால் அது செல்லுபடியானதாக கருதப்படும்.

இவ்வழக்கில் தீர்ப்பை வழங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் தம்பையா அவர்கள் பின்வருமாறு கூறினார். திறத்தவர்கள் திருமணம் செய்வதற்கான தமது எண்ணத்தை திருமண பதிவிற்கான அறிவித்தல் வாயிலாக வெளியிட்டிருந்த போதிலும் அவர்கள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளிலிருந்து சுதந்திரமாக விலகி அதன் பின்பு அவர்கள் எச்சமூகத்தைச் சார்ந்தவர்களோ அச்சமூகத்தின் சம்பிரதாயங்களுக்கு ஏற்ப திருமணத்தை நிறைவேற்றியிருப்பார்களாயின் அத்தகைய வழக்காற்றுத் திருமணம் ஒன்று நடைபெற்றுள்ளது என எண்பிக்கப்படும் பட்சத்தில் குறித்ததிருமணம் பொதுத்திருமணக்கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படாதவிடத்தும், ஒரு செல்லுபடியான திருமணமாக அதாவது வலிதான திருமணமாக அங்கீகரிக்கப்படும்.

## 10. Rajeswaranee Vs Suntharesaraja - 64 N.L.R 366

இவ்வழக்கில் வழக்காளியான கணவன் தான் வசிக்கும் இல்லத்தில் வசிப்பதற்காக மனைவியை அழைத்த போது எதிராளியான மனைவி வழக்காளியான தனது கணவனை, தான் வசிக்கும் இல்லத்தில் வசிப்பதற்காக அழைத்தாள். எதிராளியான மனைவிக்கு திருமண உறவை அறுக்க வேண்டுமென்ற வன்மமான எண்ணம் இருந்திருக்கவில்லை என்ற அடிப்படையில் வழக்காளியான கணவனால் தாக்கல் செய்யப்பட்ட விவாகரத்துக் கோரிக்கை வழக்கு நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது

## 11. Babu Nona Vs Alvin - 67 N.L.R 183

பாபுநோனாவும் அல்வின் என்பவரும் சட்டரீதியாக திருமணம் செய்து கணவன் மனைவியாக வாழ்ந்து வந்தார்கள். அல்வின் ஹீருஹாமினோ என்பவரை தனது வைப்பாட்டியாக வைத்திருந்தார். அல்வினுக்கு ஹீருஹாமினோவிற்கும் இடையிலான உறவின் காரணமாக அல்வின் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தார். இதனை அறிந்து கோபத்திற்குள்ளான பாபுநோனா, அல்வினுக்கு அடித்தார். காயப்பட்ட அல்வின் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

தனது கணவனின் தவறான நடத்தையின் காரணமாக தனது கணவனின் வீட்டிலிருந்து பாபுநோனா வெளியேறினாள். அல்வினின் தவறான நடத்தையின் காரணமாகவே குறித்த திருமண இல்லத்தை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் பாபுநோனாவிற்கு ஏற்பட்டுள்ளது என்பதை கவனத்திற்கெடுத்த நீதிமன்றம் அல்வின் என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட விவாகரத்து கோரிக்கை வழக்கை தள்ளுபடி செய்தது.

## 12. Gunawathi De Silva Vs Rajapaksha - 68 N.L.R 477

இவ்வழக்கில் வழக்காளியான கணவன், வன்ம உறவறுத்தல் எனும் காரணத்தின் அடிப்படையில் தனது மனைவியிடமிருந்து விவாகரத்து கோரி வழக்கு தாக்கல் செய்தான். இவ்வழக்கில் முன்வைக்கப்பட்ட சாட்சியங்களின் பிரகாரம் மனைவி வன்மமான முறையில் வெளியேறினாள் என்று குறிப்பிடப்பட்டிருந்த இறுதித்தினத்திலும் கூட அவர்கள் இருவரும் கணவன் மனைவியாக சேர்ந்து வாழ்ந்துள்ளனர்.

மேற்குறித்த விடயத்தை கவனத்திற்கெடுத்த நீதிமன்றமானது எதிராளியான மனைவிக்கு திருமணத்தை முடித்துக் கொள்ள வேண்டுமென்ற வன்மமான எண்ணம் இருந்திருக்கவில்லை என்பதனால் வழக்காளியான கணவனின் விவாகரத்துக் கோரிக்கை வழக்கை தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தது.

## 15. Kanagaretnam Vs Kanagaretnam - 71 N.L.R 522

இவ்வழக்கில் முன் வைக்கப்பட்ட சாட்சியங்களின் பிரகாரம் கணவன் மனைவியைக் கைவிட்டிருந்தான். ஆனாலும் மனைவி தொடர்ந்து திருமண இல்லத்திலேயே வசித்து வந்தாள். கணவன் மனைவியை திருமண இல்லத்திலிருந்து வெளியேற்றுவதற்கு வழக்கு தாக்கல் செய்தான். கணவனால் கைவிடப்பட்ட மனைவி அவர்களது திருமண இல்லத்தில் தொடர்ந்து வசிப்பதற்கான உரிமை தொடர்பில் எமது பொதுச்சட்டமான உரோமன் - டச்சுச் சட்டம் எடுத்துரைக்கின்றது.

உரோமன் - டச்சுச் சட்ட கோட்பாடுகளின் பிரகாரம் கணவன் தனது மனைவி தொடர்பிலான பராமரிப்புக் கடமையின் பொருட்டு மனைவிக்கு வாழ்வதற்கு வீடு, உணவு, உடை, மருத்துவ வசதி மற்றும் நாளாந்த வாழ்க்கைக்குரிய அதையொத்த அத்தியாவசிய தேவைகள் மற்றும் சேவைகள் அனைத்தையும் வழங்குவதற்கு கடப்பாடுடையவனாவான். எனவே உரோம – டச்சுச் சட்டக் கோட்பாடுகளின் பிரகாரம் குறித்த திருமண இல்லத்தில் வசித்து வருவதற்கு மனைவிக்கு உரிமை உண்டு. அவளுக்கு அதையொத்ததான மாற்றுவீட்டில் வாழ்வதற்குரிய பண வசதியை வழங்காது அவளை திருமண இல்லத்திலிருந்து வெளியேற்ற முடியாது என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

## 13. Selvaratnam Vs Ananthavelu - 42 N.L.R 487

இவ்வழக்கில் முன்வைக்கப்பட்ட சாட்சியங்களின் பிரகாரம் இந்து வழக்காற்றுத் திருமணத்திற்குரிய அடிப்படை அம்சங்களும் முக்கியமான சம்பிரதாயங்களும் நிறைவேற்றப்படாத காரணத்தால், அங்கு ஒரு வலிதான திருமணம் இடம்பெற்றிருக்கவில்லை என நீதிமன்றம் தீர்த்தது.

இவ்வழக்கின் சாட்சியங்களின் பிரகாரம் குருக்கள் மற்றும் வண்ணான் ஆகியோர் சமூகமளித்திருக்கவில்லை. தாலி கட்டப்பட்டிருக்கவில்லை. மேளதாளங்கள் முழங்கியிருக்க இல்லை. கற்பூரம் கொழுத்தப்பட்டிருக்கவில்லை. தேங்காய் உடைக்கப்பட்டிருக்கவில்லை. மாவிலை கும்பம் வைத்திருக்கப்படவில்லை.

ஒரு வலிதான இந்து வழக்காற்று திருமணத்திற்குரிய முக்கிய சம்பிரதாயங்கள், அடிப்படை அம்சங்கள் மற்றும் தேவைப்பாடுகள் எவற்றையும் திறத்தவர்கள் பின்பற்றாத காரணத்தால் இங்கு வலிதான திருமணமொன்று இடம்பெற்றிருக்கவில்லை என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

# அத்தியாயம் - 8

## மாதிரி பிராதுகள்.

**மாதிரி பிராது ( Darft - Plaint) :**

**<u>திருகோணமலை மாவட்ட நீதிமன்றம்</u>**

திருமதி....,
இல: 90, செபஸ்தியார் புரம்
நிலாவெளி,
திருகோணமலை

- **வழக்காளி** -

விடயம் : விவாகரத்து
நடபடி : வழமை
**பெறுமதி : ரூபா 3,000,000.00**

**எதிர்**

**வழக்கு இல :**

திரு.....,
இல: 61,கதிரகாமர் ஒழுங்கை
முருகாபுரி,
திருகோணமலை.

- **எதிராளி** -

**2012 ம் வருடம் ................ மாதம் ..... ம் நாள்,**

**சட்டத்தரணி பாலா இராம் மூலம் தோன்றும் வழக்காளியின் பிராது பின்வருமாறு கூறுகின்றது:**

1. இவ்வழக்கின் திறத்தவர்களது வதிவிடங்கள் அமைந்திருப்பதும் மற்றும் இவ்வழக்கிற்கான வழக்கெழு காரணங்ள் எழுந்திருப்பதும் இந்நீதிமன்றத்தின் நிர்வாக நியாயாதிக்க எல்லைக்குள் ஆகும்.

2. வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் 2008 ம் ஆண்டு மாசி மாதம் 22 ம் திகதி அன்று சட்ட ரீதியாக திருமணம் நடைபெற்றது (குறித்த திருமணம் தொடர்பான திருமணச் சான்றிதழின் அத்தாட்சிப் படுத்தப்பட்ட உண்மைப் பிரதி இல.101 "வ-1" என அடையாளமிடப்பட்டு இத்துடன் அணைக்கப்படுகின்றது).

3. வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் நடைபெற்ற திருமணம் இருவரது பெற்றோர்களாலும் பேசி நிச்சயிக்கப்பட்ட திருமணம் ஆகும்.

4. குறித்த திருமணத்தின் பின்னர் திறத்தவர்கள் இருவரும் தங்களது திருமண வாழ்க்கையினை, திருகோணமலை முருகாபுரியில் கதிரகாமர் ஒழுங்கையில் இல:61இனைக் கொண்ட ஆதனத்தில் அமைந்துள்ள எதிராளியின் பெற்றோர்களது இல்லத்தில் ஆரம்பித்ததுடன், குறித்த இல்லத்தை தங்களது திருமண இல்லமாகக்கொண்டு தொடர்ந்து தங்களது திருமண வாழ்க்கையினை நடாத்தி வந்தார்கள்.

5. வழக்காளியும் எதிராளியும் குறித்த திருமண இல்லத்தில் வசித்து வருகின்றபோது எதிராளி, வழக்காளியின் மீது தொடர்ச்சியாக கொடூரமான உடல் ரீதியான துன்புறுத்தல்கயையும் மற்றும் உள ரீதியான துன்புறுத்தல்களையும் மேற்கொணடுவந்தார்.

6. வழக்காளியின் மீது எதிராளியால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட மிகவும் கொடூரமான உடல் ரீதியான மற்றும் உள ரீதியான துன்புறுத்தல்களை தாங்கமுடியாத நிலையில், வழக்காளி 2008 ம் ஆண்டு சித்திரை மாதம் அளவில் குறித்த திருமண இல்லத்தை விட்டு வெளியேறி திருகோணமலை நிலாவெளி செபஸ்தியார் புரத்தில் இல: 90ம் இலக்கம் கொண்ட ஆதனத்தில் அமைந்துள்ள தனது பெற்றோர்களது வீட்டிற்குச் சென்றார்.

7. வழக்காளி, 2008 ம் ஆண்டு ஐபபசி மாதம் அளவில் திருகோணமலை முருகாபுரியில் கதிரகாமர் ஒழுங்கையில் இல:61ம் இலக்கம் கொண்ட ஆதனத்தில் அமைந்துள்ள எதிராளியின் பெற்றோர்களது வீட்டிற்கு திரும்பிச் சென்று தனது கணவருடன் சேர்ந்து தொடர்ந்து திருமண வாழ்க்கையினை நடாத்தி வந்தார்..

8. அவ்வாறு எதிராளியின் பெற்றோர் வீட்டிற்குச் சென்று தனது கணவருடன் சேர்ந்து திருமண வாழ்க்கையினை தொடர்ந்து நடாத்தி வந்தபோதிலும், எதிராளி, வழக்காளயின்மீது மீண்டும் மிகவும் கொடூரமான உடல் ரீதியான மற்றும் உள ரீதியான துன்புறுத்தல்களை மேற்கொணடுவந்தார்.

9. ஏதிராளியால் வழக்காளயின்மீது மேற்கொளப்பட்ட மிகவும் கொடூரமான உடல் ரீதியான மற்றும் உள ரீதியான துன்புறுத்தல்களை தாங்கமுடியாத நிலையில், வழக்காளி 2008 ம் ஆண்டு கார்த்திகை மாதம் அளவில் குறித்த திருமண இல்லத்தை விட்டு வெளியேறி திருகோணமலை நிலாவெளி செபஸ்தியார் புரத்தில் இல: 90ம் இலக்கம்

கொண்ட ஆதனத்தில் அமைந்துள்ள தனது பெற்றோர்களது வீட்டிற்கு திரும்பி வந்து விட்டார்.

10. அதன் பின்பு கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக வழக்காளியும் எதிராளியும் பிரிந்து வாழ்ந்து வருகின்றார்கள்.

11. இக்காலப்பகுதியில் வழக்காளியின் பெற்றோர்களும் மற்றும் உறவினர்களும் பல்வேறு சந்தர்ப்பங்களில் வழக்காளியையும் எதிராளியையும் ஒன்று சேர்த்து வைப்பதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் எதிராளி தொடர்ச்சியாக அதற்கு மறுப்பு தெரிவித்ததன் காரணமாக அவர்களது முயற்சி எந்தவித பயனையும் அளிக்கவில்லை.

12. மேற்சொல்லப்பட்ட நிகழ்வுகளின் அடிப்படையில் எதிராளி அமைவு வழி வன்ம உறவு அறுத்தலை (Constructive Malicious Decersion) மேற்கொண்டுள்ளார் என்ற காரணத்தின் அடிப்படையில் திறத்தவர்களுக்கிடையிலான திருமண பந்தத்தை குலைத்து கொள்வதற்கான விவாகரத்து வழக்கொன்றை எதிராளிக்கு எதிராக தாக்கல் செய்து கொள்வதற்கு வழக்காளிக்கு வழக்கெழு காரணம் ஒன்று எழுந்துள்ளது.

13. ஏதிராளி தனியார் நிறுவனம் ஒன்றில் பிரதம நிறைவேற்று அதிகாரியாக தற்போது சேவையாற்றிவருவதுடன், அவர் தனது தொழில் மூலமாக மாதாந்தம் ரூபா எண்பதாயிரத்துக்கு (ரூபா 80,000/=) மேற்பட்ட தொகையை வருமானமாகப் பெற்றுவருகின்றார்.

14. வழக்காளி தொழில் எதுவும் இன்றி தனது பெற்றோர்களது வீட்டிலேயே வீட்டுப் பெண்ணாக தற்போதும் வசித்து வருகின்றார்.

15. எனவே வழக்காளிக்கு தனது நாளாந்த வாழ்க்கையை கொண்டு நடாத்தும் பொருட்டு வழக்கு நடவடிக்கையின் போதான பிரிமனைப்பணம் மற்றும் நிரந்தரப் பிரிமனைப் பணம் என்பவற்றை எதிராளியிடம் கோருவதற்கு மேலும் வழக்கெழு காரணம் ஒன்று எழுந்துள்ளது.

16. வழக்காளி இவ்வழக்கின் பெறுமதியை ரூபா முப்பத்து லட்சமாக (ரூபா 3,000,000/=) மதிப்பீடு செய்கின்றார்.

***வழக்காளி மன்றாட்டமாக மன்றிடம் பின்வரும் நிவாரணங்களைக் கோருகின்றார்.***

அ. அமைவு வழி வன்ம உறவு அறுத்தல் (Constructive Malicious Decersion) என்ற காரணத்தின் அடிப்படையில் மேற்சொன்ன திறத்தவர்களுக்கிடையிலான குறித்த திருமண பந்தத்தை விலக்கி வைத்து விவாகரத்தை அனுமதிப்தான தீர்ப்பும் தீர்வையும்.

ஆ. வழக்காளிக்கு மாதாந்தம் ரூபா முப்பதாயிரம் (ரூபா 30,000/= ) வழக்கு நடவடிக்கையின் போதான பிரிமனைப்பணமாக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்ட தினத்தில் இருந்து இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கப்படும் காலப்பகுதிவரை செலுத்தும்படி எதிராளிக்கு கட்டளையிடும்படியும்,

இ. வழக்காளிக்கு நிரந்தர பிரிமனைப்பணமாக ரூபா இருபது லட்சம் ( ரூபா 2,000,000/=) செலுத்தும்படி எதிராளிக்கு கட்டளையிடுவதான தீர்ப்பும் தீர்வையும்.

ஈ. வழக்குச் செலவும், மற்றும்

உ. நீதிமன்றம் உசிதமானதும் பொருத்தமானதும் எனக்கருதும் ஏனைய நிவாரணங்களும்.

.................................................
**வழக்காளியின் சட்டத்தரணி**

**<u>ஆவணங்கள்:</u>**

அ. பதிலிப் பத்திரம் (Proxy).

ஆ. "வ-1" என அடையாளமிடப்பட்ட 496ம் இலக்கம் கொண்ட திருமண பதிவுச் சான்றிதழ் உண்மைப் பிரதி.

..............................................
**வழக்காளியின் சட்டத்தரணி**

**மாதிரி பிராது:**

## திருகோணமலை மாவட்ட நீதிமன்றம்

திரு....
இல.125, கண்டி வீதி,
ஆண்டாங்குளம்,
திருகோணமலை

- **வழக்காளி** -

**வழக்கு இல:**

**எதிர்**

**தன்மை - விவாகரத்து.**

**நடபடிமுறை - வழமை.**

**பெறுமதி-ரூபா 500,000.00.**

1. திருமதி......,
   இல.108, நெல்சன் மாவத்தை,
   அபயபுரம்,
   திருகோணமலை

2. திரு....,
   இல.88, வரோதயநகர்,
   திருகோணமலை

- **எதிராளிகள்** -

2012ம் ஆண்டு ......... மாதம் .........ம் திகதி ஆகிய இன்று

சட்டத்தரணி சி.சுதா மூலம் தோற்றும் வழக்காளியின் பிராது பின்வருமாறு கூறுகின்றது.

1. இவ்வழக்கின் வழக்காளியும் மற்றும் எதிராளிகளும் இந்த நீதிமன்ற நியாயாதிக்க நிர்வாக எல்லைக்குள் வசித்து வருகின்றனர்.

2. வழக்காளியும் மற்றும் முதலாம் எதிராளியும் 2003.01.18ம் திகதியன்று திருகோணமலையில் வைத்து சட்டரீதியாக திருமணம் முடித்துக் கொண்டார்கள். (திருமணச்சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி வ-1 என அடையாளமிடப்பட்டு பிராதுடன் இணைக்கப்பட்டுள்ளது).

3. அதன் பின்னர் வழக்காளியும் முதலாம் எதிராளியும் திருகோணமலை மூன்றாம் கட்டை சோலையடியில் உள்ள தமது திருமண இல்லத்தில் வாழ்ந்து வந்தார்கள்.

4. வழக்காளிக்கும் முதலாம் எதிராளிக்கும் அவர்களது திருமண பந்த வாழ்க்கையின் மூலம் பின்வரும் பெயர்களையுடைய குழந்தைகள் பிறந்துள்ளன.

1. வனஜா - 05 வயது பெண் குழந்தை 2. பாபு - 03 வயது ஆண் குழந்தை

5. இவ்வழக்கின் முதலாம் எதிராளி மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இரண்டாம் எதிராளியுடன் சேர்ந்து கடந்த இரண்டு வருடங்களாக சோர வாழ்க்கை நடாத்தி வருகின்றார்.

6. மேற்சொல்லப்பட்ட நிகழ்வுகளின் அடிப்படையில் முதலாம் எதிராளிக்கு எதிராக 'சோர வாழ்க்கை' எனும் காரணத்தின் அடிப்படையில் வழக்கைத் தாக்கல் செய்து வழக்காளிக்கும் முதலாம் எதிராளிக்கும் இடையில் நடைபெற்ற திருமணத்தை குலைத்து நீதிமன்றம் மூலம் விவாகரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு வழக்காளிக்கு வழக்கெழு காரணம் எழுந்துள்ளது.

7. இரண்டாம் ஏதிராளி தனியார் நிதி நிறுவனம் ஒன்றில் முகாமையாளராக தற்போது சேவையாற்றி வருகின்றார்.

8. இரண்டாம் ஏதிராளி தனது தொழில் மூலமாக மாதாந்தம் ரூபா அறுபதாயிரத்துக்கு (ரூபா 60,000/= ) மேற்பட்ட தொகையை வருமானமாகப் பெற்றுவருகின்றார்.

9. மேற்சொல்லப்பட்ட காரணங்களின் காரணமாக வழக்காளிக்கு ஏற்பட்ட மன உளைச்சல் மற்றும் பாதிப்பின் காரணமாக முதலாம் மற்றும் இரண்டாம் எதிராகளியிடமிருந்து ரூபா ஐந்து இலட்சத்தை இழப்பீடாக பெற்றுக்கொள்வதற்கான மேலும் ஒரு வழக்கெழு காரணம் வழக்காளிக்கு எழுந்துள்ளது.

10. குறித்த திருமணத்தால் பிறந்த மேலே விபரிக்கப்பட்ட பிள்ளைகள் தற்போது வழக்காளியின் பாதுகாப்பிலும் பராமரிப்பிலும் இருந்து வருகின்றார்கள்.

***எனவே வழக்காளி கனம் நீதிமன்றிடம் பின்வரும் நிவாரணங்களை கோருகின்றார்.***

i. 2ம் எதிராளியின் சோர வாழ்க்கையின் ( Adultery Life ) அடிப்படையில் வழக்காளிக்கும் 1ம் எதிராளிக்கும் இடையில் இடம்பெற்ற திருமணத்தை குலைத்து விவாகரத்தை அனுமதிப்பான தீர்ப்பும் தீர்வையுமஇ

ii. வழக்காளியே மேற்சொல்லப்பட்ட பிள்ளைகளின் பாதுகாப்பிற்கும் பராமரிப்பிற்கும் உரித்துடையவர் என விளம்பல் செய்வதான தீர்ப்பும் தீர்வையும்

iii. முதலாம் மற்றும் இரண்டாம் எதிராகளிகளை தனித்து அல்லது ஒருமித்து ரூபா ஐந்து இலட்சத்தை (ரூபா.500,000.00) நட்ட ஈடாக வழக்காளிக்கு செலுத்தும் படி கட்டளையிடுவதான தீர்ப்பும் தீர்வையும்

iv. மேற்சொல்லப்பட்ட எதிராளிகள் இருவரும் தனித்து அல்லது ஒருமித்து வழக்கின் செலவுத்தொகையை வழக்காளிக்குச் செலுத்தும்படியான தீர்ப்பும் தீர்வையும்

v. நீதிமன்றம் உசிதமானதெனக் கருதும் வேறு ஏதேனும் நிவாரணங்கள்

..............................................
**வழக்காளியின் சட்டத்தரணி**

**பிராதுடன் அணைக்கப்படும் ஆவணங்கள்:**

1. பதிலிப்பத்திரம் (Proxy).
2. திருமணப்பதிவுச் சான்றிதழ் - வ – 1

..............................................
**வழக்காளியின் சட்டத்தரணி**

**மாதிரி பிராது**

## திருகோணமலை மாவட்ட நீதிமன்றம்

| | | |
|---|---|---|
| வழக்கு இல: | திரு….., <br> இல.73, மத்திய வீதி, <br> நிலாவெளி <br> திருகோணமலை | |
| தன்மை - விவாகரத்து | | வழக்காளி |
| | **எதிர்** | |
| நடபடிமுறை - வழமை. | திருமதி……, <br> இல.12, கடல்முகவீதி, <br> மட்டக்களப்பு. | |
| பெறுமதி - ரூ.10,000.00 | | எதிராளி |

2012ம் ஆண்டு ......... மாதம் .........ம் திகதி ஆகிய இன்று:

சட்டத்தரணி ஆர்.பிரசாத் மூலம் தோற்றும் வழக்காளியின் பிராது பின்வருமாறு கூறுகின்றது.

1. இவ்வழக்கின் வழக்காளியின் வதிவிடம் அமைந்திருப்பதும் இவ்வழக்கிற்கான வழக்கெழு காரணம் எழுந்திருப்பதும் இந் நீதிமன்ற நிர்வாக நியாயாதிக்க எல்லைக்குள்ளாகும்.

2. வழக்காளி, எதிராளியை 2009ம் ஆண்டு சட்டரீதியாக திருமணம் செய்து கொண்டார். (திருமணப் பதிவுச்சான்றிதழ் இல:310 'வ-1' என அடையாளமிட்டு அணைக்கப்படுகின்றது).

3. குறித்த திருமணம் நடைபெற்ற பின் வழக்காளியும் எதிராளியும் இணைந்து தமது திருமண வாழ்க்கையை திருகோணமலை, நிலாவெளியில் அமைந்துள்ள இல்லத்தில் நடாத்தி வந்தார்கள்.

4. 2011ம் ஆண்டு தை மாதமளவில் எதிராளி எந்த வித காரணமுமின்றி பிழையான முறையிலும் வன்மமான முறையிலும் வழக்காளியை கைவிட்டு திருமண இல்லத்திலிருந்து வெளியேறி மேலே விபரிக்கப்பட்டுள்ள தனது தாயாரின் இல்லத்தில் வசித்து வருகின்றார்.

5. வழக்காளி எதிராளியை திருமண இல்லத்திற்கு மீண்டும் அழைத்து வந்து அவருடன் சேர்ந்து திருமண வாழ்க்கையை தொடர்ந்து நடாத்துவதற்கு தான் நேரடியாகவும் மற்றும் தன்னுடைய உறவினர்கள் மூலமாகவும் பல்வேறு தடவைகளில் முயன்ற போதும் அவை யாவும் தோல்வியிலேயே முடிந்துள்ளன.

6. மேற்குறித்த காரணங்களின் அடிப்படையில் வழக்காளிக்கு எதிராளிக்கெதிராக வன்ம உறவறுத்தல் என்ற காரணத்தின் அடிப்படையில் வழக்கை தாக்கல் செய்து விவாகரத்தைப் பெறுவதற்கு வழக்கெழு காரணம் எழுந்துள்ளது.

***எனவே வழக்காளி கனம் நீதிமன்றிடம் பின்வரும் நிவாரணங்களைக் கோருகின்றார்:***

i. வழக்காளிக்கும் மற்றும் எதிராளிக்குமிடையில் இடம்பெற்ற திருமணத்தை குலைத்து வழக்காளிக்கு விவாகரத்தை அளிப்பதான தீர்ப்பும் தீர்வையும்

ii. வழக்குச் செலவும்

iii. நீதிமன்றம் உசிதமானதெனக் கருதும் ஏனைய நிவாரணங்களும்

...............................................

**வழக்காளியின் சட்டத்தரணி**

**பிராதுடன் அணைக்கப்படும் ஆவணங்கள்:**

1. பதிலிப்பத்திரம் (Proxy)


2. திருமணப்பதிவுச் சான்றிதழ் இல. வ – 1.

.............................................
**வழக்காளியின் சட்டத்தரணி**



# <u>உரோம டச்சுச் சட்டத்தின் கீழ் வழியுரிமை உரித்து சென்றடைதல்</u>

ஒருவர் மரணசாதனம் எழுதாமல் சொத்துக்களை விட்டு இறக்கும் சூழ்நிலையில் அவற்றின் மீதான உரித்து பின்வருமாறு சென்றடைகின்றது.



# முஸ்லீம் சட்டத்தின் கீழ் வழியுரிமை உரித்து சென்றடைதல்.

ஒருவர் மரணசாதனம் எழுதாமல் சொத்துக்களை விட்டு இறக்கும் சூழ்நிலையில் அவற்றின் மீதான உரித்து பின்வருமாறு சென்றடைகின்றது.

